(சொல்லினல்படைக்க) (ச) "யொவிவெ வெதாம்ஸ்ச ப்ரஹிணோதிதஸ்மை - யோவைவேதாம்ஸ்ச ப்ரஹிணோதிதஸ்மை" நீ கொடுத்த வேதத்தைத்ருஷ்டியாகக்கொண்டு ஜகத்ஸ்ருஷ்டி பண்ணுவாராக. (ஞ) "ஸஹ-ப்ரஜாஹிவ்வா ஹாக - ஸபூரிதிவ்யாஹரத்". (நீ படைக்கவந்து தோன்றினர்) (ச) "யொஸ்ய ஹ்மாணம் விதததிபூர்வம்" என்கிறபடியே - நீ ஸ்ருஷ்டிக்க உன்திருநாபீ கமலத்திலே வந்துதோன்றின ப்ரஹ்மா முதலான தேவர்கள். (சொல்லிறற் சுருங்க நின்குணங்கள் சொல்லவல்லரே) உன் குணங்களையறிந்து பரக்கப்பேசமாட்டாமையன்றியே, ஒரோ ப்ரயோஜநங்களிலே ஸங்கோசமின்றியே உன் குணங்களைப் பேசமாட்டார். பரத்வஸுலபதகமான குணங்கள், ஜகத்காரணத்வஸுலபதகமானகுணங்கள், ஆஸ்ரிதரக்ஷகமான குணங்கள் இவற்றிலே ஒரோகோடியைக் கரைகாணமாட்டார்கள். (கக)

பன்னிரண்டாம்பாட்டு (உலகிக்யாதி).

உலகுதன்னை நீ படைத்தி — லோகத்தை நீ ஸ்ருஷ்டியாநின்றி;

கொண்டு ஸ்ருஷ்டிக்குமோவென்ன வருளிச்செய்கிறார் (ஸபூரிதிவ்யாஹரத்) என்று. ... ... ... ... (கஉ)

(க) கோ-உ-ங. (உ) சாந்தோ-அ-கஉ-உ. (உ) தை-ந-கக.
(ச) ச்வேதா-உ-கஅ. (ஞ) யஜு-அஷ்ட.

கூத்து திருச்சந்த விருத்தம் கூ-பா, உலகுதன்னை, வ்யாக்யானம்

| | |
|---|---|
| உள் | யிற்றிலே |
| ஒடுக்கி | ஸங்குசிப்பித்து |
| வைத்து | வையாநின்றி; |
| மீண்டு | சாரணத்வப்ரயுக்த வைபவத்தினின்றும் நிவ்ருத்தனாய், (அன்றிக்கே) |
| மீண்டு | திரியப்பண்ணுமென்னுமாம்; |
| உலகுதன்னுளே | லோகத்துக்குள்ளே |
| பிறத்தி | அவதரியாநின்றாய்; |
| ஓரிடத்தையவ்வியல் | ஒருஸ்தலத்தை யுடையவனென்று நிர்ணயிக்கவொண்ணாதவனாகையாலே |
| உலகு | ப்ரபஞ்சமானது |
| நின்றேடு | ஸரீரியான வுன்றேடு |
| ஒன்றி | ஸரீரீபூ(லு)ய |
| நிற்க | வர்த்திக்க |
| வேறு | ஸுபாஸ்ரயமாகைக்கு அஸாதாரணவிக்ரஹயுக்தனாய்க்கொண்டு |
| நிற்றி | வ்யாவ்ருத்தராயிராநின்றி; |
| ஆகலால் | ஒருவகையாலும் பரிச்சேதிக்க வொண்ணுமையாலே |
| உலகு | லோகத்திலே |
| சூழலுள்ள | ஆச்சர்யமான படிகளையுடைய |
| நின்னை | உன்னை |
| யாவர் | யார் |
| உள்ள | அறிய |
| வல்லரே | ஸக்தர். (கூ) |

அவ;—பன்னிரண்டாம்பாட்டு. ஜகத்காரணபூதனாய் ஸ்ருஷ்ட்யாதி முகத்தாலே நின்றுரகஸ்யிக்குமளவேயன்றியே, அஸாதாரண விக்ரஹயுக்தனாய் அவதரித்துரகஸ்யிக்கும் உன்படியை லோகத்தில் ஆர் நிரூபிக்கவல்லரென்கிறார்.

வ்யா. (உலகுதன்னை நீ படைத்து) அசிந்த்ய உபகரணமாகக்கொண்டு ப்ரக்ருத ஸ்ருஷ்டியைப் பண்ணினாய், ப்ரஹ்மாதிகளை தேவதாந்தர்யாமியாய்க்கொண்டு லோகபதாத்தங்களையும் ஸ்ருஷ்

திருச்சந்தவிருத்தம், கஉ-பா, உலகுதன்னை, வ்யாக்யானம். கஉ

டியாநிற்றி. (உள்ளொடுக்கிவைத்தி) நித்ய நைமித்திகாதி ப்ரளயா
பரூக்களிலே நாமரூபங்களையிழந்த பதார்த்தங்களை உன் திரு
வயிற்றிலே வைத்து ரக்ஷியாநிற்றி. இத்தால் - ஸகல பதார்த்த
ஸ்ருஷ்டிக்கும் கர்த்தாவாய் ஸகல ஸம்ஹாரங்களிலும் ரக்ஷகனு
மாயிருக்கிறான், அடியிலே, (க) "வைஹாவுழ - பஹாஸ்யாம்"
என்கிற ஜகதுபாதாநகாரண பூதனென்றதாய்த்து. (மீண்டுலகுதன்
னுளே பிறத்தி) ஜகதேக காரணத்வத்தால் வந்த வைபவத்தினின்
றும் மீட்டு உன்னுலே ஸ்ருஷ்டமான இவ்வுலகத்திலே சில கேஷித்
ராஜ்ஜர்க்குப்புத்ரனுப் வந்தவதரியாநிற்றி. (மீண்டு) அதுபோராமே
திரியட்டு மென்றுமாம். ஸகல பதார்த்தங்களுக்கும் ஜகனனை நீ
உன்னுலே ஸ்ருஜ்யனு யிருப்பானொரு கேஷத்ரஜ்ஞனை ஜகனுக்கிக்
கொண்டு ஜநிப்பதே. ப்ரளயாபத்திலே ஸகல பதார்த்தங்களையும்
உன் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்த நீ ஒரு ஸத்ரீவயிற்றிலே
கர்ப்பபூதனுவதே! (உ) "வீர்தூகூ ஒய்யாஹயெஹாநம் யூதம்
யெநாவிலஜமகூ - ப்ரீத்யாத்வம் நாரயெஹாநம் த்ருதம்யேநாகி
லம்ஜகத்" என்னக் கடவதிறே.

(ஒரிடத்தையல்லையால்) ஒரு ஸ்தலத்தாயென்று நிர்ணயிக்க
வொண்ணுதவனுகையாலே ஒருகோடியிலே சேர்த்தறியப்போகிற
தில்லை; அதாகிறது - †(உபாதான)காரணத்வத்திலே புறம்பில்லா
மையாலே கார்யமென்ன வொண்ணுது, அவதாரத்தில் ஸஜாதீயபா
வத்தில் புறம்பில்லாமையாலே காரணமென்ன வொண்ணுது, இது
என்னபடி யென்கிறார். (உலகுநின்னுதரத்தான் றிநிற்கவேறுநிற்றி) ஜ
கத்து உனக்கு ஸரீரமாகையாலே உன்னைப்பிரியாதேநிற்க, அவை
காரண விக்ரஹயுக்தனுய்க்கொண்டு வ்யாவ்ருத்தனுயிருத்தி. அதா
கிறது - விழுகாலை காலத்திலே ஆத்மாவாய்நின்று ஸத்தையை
நோக்கியும், அபிமுகீகரித்தவன்று ஸ்வாபாஸ்ரயணைக்கு அவை
காரண விக்ரஹயுக்தனையுமிருக்குமென்னை. (ஆதலால்) ஒருவகை
யாலும் பரிச்சேதிக்கறியவொண்ணுமையாலே. (உலகுதின்னையுள்
ளசூழல்யாவருள்ளவல்லரே) ஆஸ்சர்யமானபடிகளையுடைய வுன்னை
லௌகிகபுருஷர்களில் அறியவல்லவரார். சூழல்—சூழ்ச்சி.. (கஉ)

---

அரு. பன்னிரண்டாம் பாட்டு. (மீண்டு)காரணத்வத்தில்நின்றும் மீண்
டென்னுதல், காரணமானதுக்குமேலே யென்னுதல். (ஸ்த்ரீவயிற்றிலே)
என்றதுக்கு ப்ரமாணமருளிச்செய்கிறார் (ப்ரீத்யாத்வமித்யாதி). சூழலுள்ள
தின்னை - உலகில்-யாவருள்ளவல்லரென்றபடி. சூழ்ச்சி-வ்யாபாரம். (கஉ)

---

(க) ஐத-ஆ- (உ) வி-பு-நி-உ.-உக. †

மூ.—இன்னையென்று சொல்லலாவதில்லை யாதுமிட்டிடைடப்
பின்னைகேள்வனென்பருன் பிணக்குணர்ந்த பெற்றியோர்
பின்னையாயகோலமோடு பேருமூருமாதியும்
நின்னையார்நினைக்கவல்லர் நீர்மையால் நினைக்கிலே. (சுரு)

பதின்மூன்றாம்பாட்டு. (இன்னையென்றித்யாதி).

இன்னை என்று அநுஷ்டுப்வபாவாதி கோடியில் ஏவம்
விதனென்று

சொல்லலாவது சொல்லத்தக்கது
யாதுமில்லை ஒன்றுமில்லை;
இட்டு கோரிய
இடை யத்தியத்தையுடைய
(யத்வா - 'யாதுமிட்டு" என்று கூட்டி)
யாதும அல்லாத ஸுபாஸ்ரயங்களையடைய
இட்டு விட்டு
இடை கோபஸ்ஜாதியையாய் வந்தவதரித்த
பின்னை நீளாதேவியான
கேள்வனென்பர் - வல்லபனென்று சொல்லுவர்கள்;
உன்பிணக்கு உன்னுடைய அவதாராகாமசேஷ்டிதவிஷ
யமானஆஸ்ரிதாஸ்ரிதர்களுடைய
விவாதத்தை
உணர்ந்த அறிந்த
பெற்றியோர் பண்டிதர்கள்
பின்னை இதரஸ்ஜாதியனையவதரித்து நிற்கச்செ
ய்தே
ஆய இதரவிலக்ஷணமான
கோலமோடு விக்ரஹத்தோடு
பேருரும் திருநாமங்களென்ன,
ஊருரும் அவதரித்ததேசப்ராபாவமென்ன,
ஆதியும் அவ்வவதார விக்ரஹத்துக்குநிதாரமெ
ன்ன, இவற்றையுடையவன்னை,

(யத்வா)
பின்னை அவதாரஸமாப்தியில்

ச்சந்தவிருத்தம் கந-பா, இன்னையென்று வ்யாக்யாநம், சத

ஆய விப்ரமஸ்த்தலமான
கோலமோடு வ்யூஹவிக்ரஹங்களோடு கூடிய
பேரும் அக் குணசேஷ்டிதங்களுக்கு வாசகங்க
ளான திருநாமங்களென்ன,
ஊரும் அவ்வ்யூஹஸ்த்தலங்களான ஆமோதா
திகளென்ன,
ஆதியும் இவற்றுக்கடியான பரத்வமென்ன; இவ
ற்றையுடைய
நின்னை உன்னை
("நீர்மையால் நினைக்கிலல்லது ஆர் நினைக்கவல்லர்" என்
று கூட்டி)
நீர்மையால் உன்னௌலப்ய்யத்தாலே
நினைக்கிலல்லது அறியுமத்தனையொழிய
யார் ஆர்
நினைக்கவல்லர் ஸ்வஸாமர்த்த்யத்தாலே அறியப்பத்தர்,
("அல்லது" என்று அத்த்யாஹார
ப்பதம்) (கந)

அவ;—பதின்மூன்றும்பாட்டு. இவ்வவதாரரஹஸ்யம் ஒருவர்க்
கறியவொண்ணுதே வென்னில்; கோ(மா)பஸஜாதீயனுய்வந்தவ
தரித்த நீ காட்டித்தர உன்னைவிட்டுஸ்வாம்யம் காணுமென்றாழிய ஸ்வ
யமர்த்த்யத்தாலே காணமுடியாதென்கிறார்.

வ்யா;—(இன்னையென்று சொல்லலாவ தில்லையாதும்) அவ
தரித்து நிற்கிறநிலையில் அஜஹதஸ்வபாவங்களென்ன, லௌலப்ப்யா
திகளென்ன, இவற்றிலே ஒரு கோடியாலே உன்னைப் பரிச்சேதிக்
கப்புக்கால் எவம் விதனென்றுசொல்லலாவதொன்றுமில்லை. (இட்
டடைப்பின்னை கேள்வனென்பர்) (க) "தவ்யீராஃபொரிஜாநம்கி
யாநிழ் – தஸ்யதீராபரிஜாநந்தியாநிம்" என்கிறபடியே அவ
தாரரஹஸ்யஜ்ஞாநமுடையவர்களுக்கும் "மிதுநமேஷ்யாயணீயம்" எ
ன்று ஸஜாதீயரிற்காட்டில் வ்யாவ்ருத்தனையுன்னை உபதேசிப்பா
ர்களன். கோதானை இடையயுடையரப்பின்னைப்பிராட்டிக்குவல்லபை
னென்று சொல்லுவர்கள். "யாதுமிட்டு" என்றுகீழோடே கூட்டினை

---

அருத. பதின்மூன்றும்பாட்டு. (யாதும்) என்றும். "இட்டு" என்றது-
இட்டளமாய், அத்தால்-ஸங்கோசமாய், (கோரி து) என்கிறதுயாதுமிட்டு - அட

(க) ஆரண்யம்-112.

(i

ஊஉ திருச்சந்தவிருத்தம் கஉ-பா, இன்னையென்று வ்யாக்யாகம்.

போது, ஸுபாஸ்ரயத்தைதேயாதுகிற ப்ரகரணங்களில்*அங்குஷ்ட்டமாத்ரமென்றும்(க) "கூஹ்ரு-ய-ர்வகஷீவஜ்ரவ-ய-ள அக்நிர்மூர்த்தா சக்ஷுஷீசந்த்ரஸ-ர்யௌள" என்கிறபடியே த்ரைலோக்ய ஸரீரனென்றும் சொல்லுகிற ஸுபாஸ்ரயங்களை யடங்கவிட்டு, (உ) "ஜ-ஷ்ரவெ வஜ-ந-ஷீ-மநுஷ்யத்வேசமாநஷீ" என்று கோ(மி.ஸா) பஸஜாதீயனுய் வந்தவரித்த நீளாவல்லபனை ஸுபாஸ்ரய மென்பர்கள். (உன்பிணக்குணர்ந்த பெற்றியோர்) உன் நிமித்தமாக ஆஸ்ரிதர்க்கும் அநாஸ்ரிதர்க்குமுண்டானவிவாதத்தை அநுஸந்தித்திருக்கும்பண்டிதர்கள். அதாகிறது-(கூ) "பேருமோராயிரம் பிறபலவுடையவெம்பெருமான்" என்றுரைத்து ஆஸ்ரிதருடையவறிவு; "பேருமோருருவமுமுளதில்லை" என்றுரைத்து அநாஸ்ரிதருடைய வறிவு. இவ்விவாதத்துக்கடி யீ யென்றறியுமவர்கள்.

(பின்னையாயகோலமோடு பேருலகுமாநியும் நின்னை) இதர ஸஜாதீயனுய்வந்தவதரித்து நிற்கச்செய்தே ஸர்வ விஸஜாதீயமான வைலக்ஷண்யத்தையுடைய விக்ரஹமென்ன, அவதாரத்தில் குணசேஷ்டிதங்களுக்கு வாசகமானதிருநாமங்களென்ன, அவதரித்தசேஷ ப்ரபாவமென்ன, அவ்விக்ரஹத்துக்குநிதாநமென்ன, இவற்றையுடையனுனவுன்னை; அதவா, அவதாரஸமாப்தியில்விஸ்ரமஸ்தலமான வ்யூஹ விக்ரஹங்களென்ன, தத்தத்குண சேஷ்டித வாசகங்களான திருநாமங்களென்ன, ஆமோதாதிவ்யூஹ†ஸ்வபாவங்களென்ன, இவற்றுக்கடியானபரத்வமென்ன, இவற்றையுடையவுன்னை யென்றுமாம். (நீர்மையால் நினைக்கிலல்லது ஆர்நினைக்கவல்லார்) உன்னுடைய நீர்

---

ங்கஇட்டு, வேதங்களிலே சொல்லுகிறப்ரகாரங்களில் எல்லாப்ரகாரங்களையுமிட்டுச்சொன்னலும் இப்படிப்பட்டவனென்று சொல்லலாவதில்லை -சொல்லப்போகாதென்றபடி. இடை - இடைக்குலமாதல்; நீயென்றறிகையாவது - ஜ்ஞாநாஜ்ஞாநங்களைக் கர்மாநுகுணமாகக் கொடுத்துவிவாதத்தைப்பண்ணுகிறவன்நீயென்று அறியுமவர்களென்றபடி.

பிள்ளையாயகோலம் - இதரவ்யாவ்ருத்தமான விக்ரஹமென்னுதல்; மநுஷ்யத்வத்துக்கு அவரமாயிருக்கிற திர்யகாதிகளென்னுதல். "என்றுமாம்" என்று - தாம் சொன்ன ஜபிக்கும்பொருள் - திர்யகாதிக ளென்று சொன்ன இரண்டாமர்த்தம். ... ... ... (கூ)

---

(க) மூண்ட்-உ-க-ஸ. (உ) வி-ட்டு-க-கூ-கஸ-ரு. (கூ) தி-வாய்-க-கூ-ஸ.
(ஸ) (ரு) † (பா) ஸ்த்தாநங்களென்ன.

நிருச்சந்தவிருத்தம் கசு-பா, தூய்மையோகம் வ்யாக்யாநம். சாங

மூ.—தூய்மையோகமாயினுய் தூழாயலங்கல் மாலையாய்!
ஆமையாகியாழ்கடற்றுயின்ற வாதிதேவ
நாமதேயமின்னதென்ன வல்லமல்லவாகிலும்
சாமவேதகீதனைய சக்கரபாணியல்லியே. (கசு)

மையாலே நீ அறிவிக்க அறியுமத்தனையொழிய வேறு அறியவல்லாராரர். அதாகிறது - (க) "வஹ-நிவெவுதீதாநி - பஹ-நி மேவ்யதீதாநி" என்று தொடங்கி, (உ) "ஜநுகூ-வமெஜிவுழு - ஜங் மகர்மசுமேதிவ்யம்" என்றுநீ அறிவித்தாப்போலே அறிவிக்க வரியுமித்தனை. (கஉ)

பதிணன்காம்பாட்டு. (தூய்மையிதியாதி)

தூய்மை ஸம்ஸாரிஸ-த்தியினுடைய
யோகமாயினுய் யோகநிர்வாஹகனேவனே!
தூழாயலங்கல் திருத்தூழாயிதழ்கனுடைய
மாலையாய் மாலையையுடையவனே!
ஆமையாகி கூர்மரூபியாய்
கம்பீரமான
கடல் ஸமுத்ரத்திலே
கண்வளர்ந்; — —
காரணபூதனை
தேவ அந்தகாரணத்வத்தைத்யோதிப்பிக்கிறவனே;(தி-வ-கீ-பா-உ-தி- திரு-க்ரீடாத்யுதியிறே)
ஆதியென்று பா(ஹா)வப்ரதாநமாய், ஆதித்வத்தை — காரணத்வத்தை யென்றுகவுமாம்;
நின் கூர்மரூபியான தேவருடைய
நாமதேயம் திருநாமங்களுக்கு வாச்யங்களான குணசேஷ்டிதங்களை [லுகைக்கு
இன்னதென்ன ஏவம்விதமென்று பரிச்சேதித்துச் சொல்
வல்லம் ஸாமர்த்யத்தையுடையோம்
அல்லவாகிலும் அன்றாகிலும், (நான் அஸமர்த்தனாகிலுமென்றபடி.

(க) கீதை-சா-கு. (உ) கீ-சா-கூ.

சாமவேத சாந்தோக்யத்திலே
கீதையை ப்ரதிபாதிதனை
சக்கரபாணி } த்ருதராங்க சக்ரனை ஆதித்யாந்தர்வர்
யல்லியே } த்தியன்றே. (கசு)

அவ;—பதினன்காம்பாட்டில் நம்மவதாரரஹஸ்யம்தீரலிங்கபடி யென்னென்னில்; ப்ரயோஜநாந்தரபரர்க்காக தீர்யக்ஸ்ஜாதியளைப் வந்தவதரித்த உன்குணங்களைப்பரிச்சேதித்தறிய மாட்டேனேயாகி லும், அவ்வடிவழகு வேதைகஸமதிகம்யமென் றறிந்தேதனென்கிறார்.

வ்யா. (தூய்மையோகமாயினுய்) அசித்ஸம்ஸர்க்கத்தாலே அஸுத்தனைஸம்ஸாரிக்குஉன்க்ருபையாலேஅசித்ஸம்ஸர்க்கத்தை யறுத்துநித்யஸூரிகளோடேசேர்த்து உன்னை அநுபவிப்பிக்கவல்ல ஸுத்தியோகத்தை யுடையவனே! ஸம்ஸாரி ஸுத்தியோகத்துக்கு நிர்வாஹகனனவனே. இத்தால்-ஸம்ஸாரோத்தரணத்துக்கு உபா யமும் நீயேயென்கை. ஹேயப்ரத்யநீகனனவனே யிறே சேதநர் க்கு ஸம்ஸாரமாகிற அசுத்தியைப் போக்கவல்லான். (தூயாயலங் கல்மார்பா) ஸர்வேச்வரத்வ சிஹ்நமான திருத்துழாய் மாலையா லே அலங்க்ருதனனவனே. திருத்துழாய் காதத்வசிஹ்நமானையா லும், போக்யத்வ சிஹ்நமானையாலும், ப்ராப்யபூதனும் நீயேயென் கை, (ஆனையாகி) ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களுக்காக அம் ருதமதநத்துக்கு அநுகூலமான கூர்ம வேஷத்தைக் கொண்டு, (ஆழ்கடல் துயின்ற) அகாதமான கடலிலே மந்தரம் அமிழ்ந்தாத படி உன்முதுகிலே அது நின்றுசூழலக்கண்வளர்ந்தருளினவனே! (க) "கூர்மரூபேணயத்வயா கார்யமேதத்" கரிஷ்யதி விஷயம்ஹரிः - யதீ ரோதமத்யேத்வயாவத் கூர்மரூபீஸ்வயம்ஹரிः" என்னக்கடவதிறே. (ஆதிதேவ) ஜகத்துக்கு நீயே காரணபூதனென்னுமிடத்தை ப்ரகா சிப்பித்தவனே. ப்ரயோஜநாந்தரபரரென்று பாராதே அவர்களா பத்துக்கு உன்னையழிய மாறி உதவுகையாகிறவிது உத்தாதகனுக்க ல்லது கூடுமோவென்கை.

(நின்னுமதேய மின்னதென்ன வல்லமல்லவாகிலும்) கூர்ம ரூபியானதேவரீருடைய குணசேஷ்டிதங்களை எல்லம்விதமென் றபரி ச்சேதித்துச் சொல்லமாட்டேனேயாகிலும், "நின்னுமதேயம்" என்று

---

அரு;—பதினலாம்பாட்டில். "நாமதேயம்" என்றுல் குணசேஷ்டிதங் களைக்காட்டுமோ வென்னவருளிச்செய்கிறார் (நின்நாமதேய மித்யாதி). அதி ரமணீயம் - கீதத்துக்கு போக்யமானவிக்ரஹ மென்றபடி. ... (கசு)

---

(க) வி-ப-

திருச்சந்தவிருத்தம் கரு-பா, அங்கமாறும் வ்யாக்யாகம். சரி

மூ.—அங்கமாறுவேத நான்குமாகி நின்றவற்றுளே
தங்குகின்றதன்மையாய் தடங்கடற்பணத்தலைச்
செங்கணரவணைக்கிடந்த செல்வமல்குசீரிணைப்
சங்கவண்ணமன்னமேனி சார்ங்கபாணியல்லியே. (சரி)

---

வாச்யமான குணசேஷ்டிதங்களோத் தத்வாசகமான சப்தத்தாலே லக்ஷிக்கிறது{சாமவேதகீதனையசக்கரபாணியல்லியே)? அழிவுக்கிட்டகூர்ம விக்ரஹம்சாந்தோக்யஸித்தமாய்,கையும்திருவாழியுமான அதிரமணீயமான ஹிரண்மயவிக்ரஹமென்றறிந்தேன். (த) "யஷோவாஷிதெஹிரண்யஃபாராவிஷோ உப்யுதெ ஃயஷோந்தராதித்யேஹிரண்மயஃபுருஷோத்ருப்யதே" என்றும், (உ) "ஷ்விதப்ஜ ஜணஷ யுவதீஃநாராயணஃ+யுதமஷஜவகரஃ-ஸவித்ரு மண்டலமத்யவர்த்தீநாராயணஃ-த்ருதமஷங்கசக்ரஃ" என்றும்சொல்லக்கடவதிறே. (சசி)

பதினைந்தாம்பாட்டு. (அங்கமித்யாதி).

அங்கம் — ஸீக்ஷாத்யங்கங்களினுடைய
ஆறும் — ஷட்கமென்ன,
வேதநான்கும் — அங்கியான வேதசதுஷ்டயமென்ன, இவற்றுக்கு
ஆகிநின்று — நிர்வாஹகனாய் நின்று
அவற்றுளே — அந்த ஸாங்கமான வேதங்களினுள்ளே (அன்றிக்கே)
அங்கமாறும் — ஸீக்ஷாத்யங்கஷட்கமென்ன,
வேதநான்கும் — அங்கியான வேதசதுஷ்டயமென்ன, இவற்றுக்கு நிர்வாஹகனே!
"ஆகி நின்றவற்றுள்" என்று கூட்டி-
ஆகி — நிர்த்தோஷப்ரமாணமாய்
நின்றவற்றுளே வர்த்திக்கிற அந்த வேதங்களினுள்ளே
தங்குகின்ற — ப்ரமேயமாய் வர்த்திக்கிற [டையவனே!
தன்மையாய் — ஸத்யத்வஜ்ஞாநத்வாதி ஸ்வபாவங்களோடு
கூடும் — இசைந்தான

ஃ) சாந்தோ-க-சு-சு- (உ)

| | |
|---|---|
| கடல | க்ஷீரஸமுத்ரத்தி |
| பண | ப(ஹ)ணங்களையுடைய |
| தலை | அக்ர(ம்ர)த்திலே யிருக்கிற |
| தெடம் | |
| கண் | திருக்கண்களையுடையவனை |
| நாகணை | திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே |
| கிடந்த | கண்வளர்ந்தருளுகிற |
| மல்கு | நிரவதிகமான |
| செல்வம் | ஐச்வர்யமென்ன |
| சீர் | கல்யாணகுணங்களென்ன, இவற்றையுடையவனே! |
| சங்க | சங்கத்தினுடைய |
| வண்ணமன்ன | வர்ணம்போலே யிருக்கிற |
| மேனி | திருமேனியை யுடைத்தாய் |
| சார்ங்கபாணி | பின்பு கூத்திய குலத்திலே அவதரித்து |
| யல்லையே | ஸ்ரீஸார்ங்கத்தைத்தரித்தவன்னல்லையோ; |

"இப்படிப்பட்ட வுன்னுடைய நீர்மையைப் பரிச்சேதித்தறியவல்லாராரார்" என்று வாக்ய சேஷம். (கரு)

அவ;—பதினைந்தாம்பாட்டு. வேதைகஸமதிகம்யமான ஸ்வபாவத்தையுடைய நீ ஆஸ்ரிதாநுக்ரஹார்த்தமாக அவதாரகந்தமான திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளி, அது பரதசையென்னும்படி அங்கு நின்றும் ஆஸ்ரிதரூபகந்த ரூபத்தையே உனக்குரூபமாகக்கொண்டு வந்தவதரித்த உன்னுடைய நீர்மையை ஒருத்தரால் பரிச்சேதிக்கப்போமோ வென்கிறார்.

வ்யா. (அங்கமாறுவேதாநான்குமாகிநின்று) ஸ்ரீகூர்மாத்யங்களாறும், அங்கியான வேதங்கள் நாலுமாகிற இவற்றுக்குப்ரவர்த்தகனுய்நின்று. (அவற்றுளேதங்குகின்ற தன்மையாய) ஸாங்கமான வேதங்களினுள்ளே ப்ரமேயமாய்வர்த்திக்கிற ஸ்வபாவங்களையுடையவனே! "ஆகிநின்றவற்றுளே" என்று நிர்த்தோஷப்ரமாணமாய்நின்றவற்றுளென்னவுமாம். வேதப்ரதிபாத்ய

---

அரு;—பதினைந்தாம்பாட்டு. ஸ்ரீசிக்ஷை, வ்யாகரணம், நிருக்தம், சந்தஸ்ஸு, ஜ்யோதிஷம், கல்பஸூத்ரமாகிற அங்கங்களாறும். ... (கரு)

திருச்சந்தவிருத்தம் கரு-பா, அங்கமாறும், வ்யாக்யாநம். சள

களாவன - (க) "வஸ்து₂ஜ்ஞாநழ - ஸத்யம்ஜ்ஞாநம்" இத்யாதிகளிற் சொன்ன ஸர்வாதிகத்வமென்ன, (உ) "யஷ்ஷவ₂ஜ்ஞஷ்ஷவ₂விஷ - யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" இத்யாதிகளிற்சொன்ன கல்யாணகுணங்களென்ன, (ஙூ)"வ்ரீவ்ரு நாராயணஃ ஷ்யு தஃ ஷ்வ்யாப்யநாராயணஃ ஸ்த்திதஃ" இத்யாதிகளிற்சொன்ன உபயவிபூதிநாதத்வமென்ன,(ச) "ரஹாராஜ நம்வாஸஃ - மாஹாராஜநம்வாஸஃ" இத்யாதிகளிற்சொன்ன விக்ரஹயோகமென்ன, (ஞ) "யஷநஷோஜாராழிதூஹிரண்ஷ யஃவ₂ரு₂ஷஃ - யஷோஷாந்தராதித்யே ஹிரண்மயஃபுருஷஃ" இத்யாதிகளிற்சொன்ன அவதாரங்களென்ன, (ஸ) "தஷிஷ்ணோஃவரஃவழ - தத்விஷ்ணோஃபரமம்பதம்" இத்யாதிகளிற் சொன்ன நித்யவிபூதியோகமென்ன இவை.

(தடங்கடலித்யாதி) வேதைக ஸமதிகம்யமாய் ஸ்வபாவங்க ளுக்கேட்டே போகாதபடி திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளி நிணங்களை ப்ரகாசிப்பித்தவனே!; இடமுடைத்தான கடலிலே யுடைய ஸ்பர்ஶத்தாலே விகஸிதமான பணத்தின் தலையிலே மதுபாநமத்தரைப்போலே சிவந்த திருக்கண்களையுடையனை திரு வநந்தாழ்வாணுகிற படுக்கையிலேகண்வளர்ந்தருளி, நிரவதிகமான ஐஸ்வர்யத்தையும் கல்யாணகுணங்களையுமுடையவனே.(சங்கவண் ணமன்னமேனியித்யாதி) கூரார்ணவஶாயித்வம் பரதசையென்னு ம்படி அங்குநின்றுமக்ருதயுகத்திலேசேதார்விரும்புகைக்காகசங்க கம்போலே யிருக்கிற திருமேனியையுடையையாய்த்திருவவதரித் து, அதுக்குமேலே த்ரேதாயுகத்திலே, ஆர்ரிதவிரோதிகளான ராவணதிகண்டகரை நிரஸிக்கைக்கு க்ஷத்ரியகுலத்திலே வந்தவத ரித்து ஶ்ரீ ஶார்ங்கத்தைத்திருக்கையிலே தரித்தவனல்லையோ? இப் படி உண்டையடைய காளமேகநிபஸ்யாமமான திருநிறத்தையழியமா றியும்,(எ)" கூடாதம்ஶாந-ஷஂஶிதெநு-ஆத்மாநம் மாநுஷம்மந்யே" என்றுபரத்வத்தையழியமாறியும் ரக்ஷித்தவன் னுடைய நீர்மையை ப்பரிச்சேதிக்கவல்லாரார்என்று வாக்யசேஷம். ... (கரு)

(க) ஸ்த-ஆ . (உ)முண்ட-க-க-கூ. (ஙூ) ஸ்த-ஙா-கக.
(ச) ப்ருஹ்ம-ச-ஙூ-கூ. (ஞ) சாந்தோ-க-கூ-கூ. (ஸ) ஸாம-உத்தர-
(எ) ரா-யு-கஉ0-கக.

மூ.—தலைக்கணத்துகட்குழம்பு சாதிசோதி தோற்றமாய்
நிலைக்கணங்கள்காணவந்து நிற்றியேலும்நீடிருந்
தலைக்கணங்கள்சொற்பொருட் கருத்தினல் நினைக்வொணு
மலைக்கணங்கள்போலுணர்த்தும் மாட்சிநின்றன்மாட்சியே.

## பதினெழும்பாட்டு (தலைக்கணமித்யாதி)

தலைக்கணம் ப்ரதமமான தேஹகணமென்ன,
துகள் க்ஷுத்ரமானஸ்தாவரமென்ன,
சூழம்புசாதி மிஸ்ர யோநிகளான மநுஷ்யதிர்யக்குக்
களென்ன, இவற்றிலே
சோதி அப்ராக்ருதஜ்யோதிர்மயவிக்ரஹத்தோடே
தோற்றமாய் அவதரித்து
நிலைக்கணங்கள் ஸ்தாவரங்கள்
காணவந்து அநுபவிக்கும்படி வந்து
நிற்றியேலும் நின்றாலும்
நீடு நித்யமாய்
இரும் விஸ்தீர்ணமான
கலை வேதவேதாங்கங்களுடைய
கணங்கள் ஸமூஹங்கள், (அபிதாநவ்ருத்தியென்ன)
சொல்பொருள் பதார்த்தத்வமென்ன,
கருத்து தாத்பர்யவ்ருத்தியென்ன, இவற்றாலே
நினைக்கொணு நினைக்கவொண்ணாது; (ஆனையாலே)
மலைக்கணங்க ள்போல் } பர்வத ஸமூஹங்கள்போலே அதிபத்
யமாய், அபரிச்சிந்நமான
நின்தன்மாட்சி உன்னுடைய அவதார லீலாகுணசேஷ்டிதங்கள்
யென் றுணர்த்தும் } வைலக்ஷண்யமென்றறிவிக்கப்படும், பரிச்
சேதிக்கப்படுமதன்று. (கசு)

அவ;— பதினெழும்பாட்டு. திருப்பாற்கடலிலே நின்றும்
தேவமநுஷ்யாதிகளிலே அவதரித்து ரக்ஷிக்குமளவன்றிக்கே,
ஸர்வாதாரபூதனாய்க்கொண்டு ப்ரமாணகணங்கள் பரிச்சேதிக்க
மாட்டாதபடியிறே உன்னுடைய அவதாரலீலாகுணசேஷ்டிதங்கள்
திருப்பதென்கிறார்.

வ்யா;—(தலைக்கணத் தநுகட்குழம்புசாதி) மீதவகணமமன்ன, க்ஷுத்ரகணமென்ன, நடுவுண்டான மநுஷ்ய திர்யக்குக்களென்ன, என்று சொல்லுகிற சதுர்வித ஶரீரங்களிலே. (குழம்புசாதி) மீதவகணம் புண்யயோநியாய், ஸ்த்தாவரங்கள் பாபயோநியாய், மநுஷ்யதிர்யக்குக் களிரண்டும் புண்யபாப மிஶ்ரயோநிகளாகை யாலே "குழம்புசாதி" என்கிறது. திர்யக்குக்களுக்கு மிஶ்ரயோநித்வம் ஆஹாரநித்ராதிகளாலே மநுஷ்யஸாம்ய மூண்டாகை யாலே. க்ஷுத்ரகணமென்று - ஸ்த்தாவரத்துக்கு உபலக்ஷணம். (துகள்) குற்றமும், புழுதியும். (சோதிதோற்றமாய்) (க) "வாயுஜ்யோதிரூபலம்பத்ய" - பரஞ்ஜ்யோதிரூபலம்பத்ய" என்கிற அப்ராக்ருத திவ்யஸம்ஸ்த்தாநத்தை சதுர்விதஜாதிகளிலும் ஸஜாதீயமாக்கியவதரித்து. ஸ்த்தாவரஜாதியிலும் குப்ஜாம்ரமாய் அவதரித்தானிறே. (நிலைக்கணங்கள் காணவந்து நிற்றியேலும்) மீதவாதிகளேயன்றியே ஸ்த்தாவரங்களும் உன்னை அநுபவிக்கும்படி வந்துநின்றாலும். அதாவது - உன்னை ஸ்பர்ஶித்தவாயு அவற்றைஸ்பர்ஶிக்கஸ்தாவரத்வமேறுதுவானபாபம்போமென்கை.

(நீழிருங்கலையித்யாதி) நீ இப்படி தாழநின்றாலும் ப்ரமாணங்கள் உன்னுடைய அவதாரலாவபவத்தை நெஞ்சாலும் பரிச்சேதிக்கமாட்டாது. (நீழிருங்கலைக்கணங்கள்) ஸ்வரூபேணவும் ப்ரவாஹரூபேணவும் நித்யமாய்ப் பரப்புடைத்தாயிருந்துள்ள சதுர்த்தஶவித்யாஸ்த்தாநங்களும். "கலி" என்று-வேதமும், அங்கமும். (உ) "ஈஜூராமிவதிஷொவெஷாஃ - அங்காநிசதுரோவேதாஂ" இத்யாதியாலே சதுர்த்தஶவித்யாஸ்த்தலங்கள் சொல்லப்பட்டதிறே. (சொல்பொருள் கருத்திரை நினைக்கொணை) அபிதா(தியா)வ்ருத்தியாலும் தாத்பர்யவ்ருத்தியாலும் ஒரோ அவதாரத்தை நெஞ்சாலும்பரிச்சேதிக்க மாட்டாமையாலே. (மலைக்கணங்களித்யாதி) பர்வதஸமூஹங்கள்போலே அமேத்யமாய் அபரிச்சிந்நமான உன்னுடைய அவதாரகுண சரித்ரங்களென்றவற்றிலே அறிவிக்கப்படும் வைலக்ஷண்யம் உன்னைவிலக்ஷண்யம். (மாட்சி - அழகு. ... (கசு)

---

அரு;—பதிணாறம்பாட்டில்.(ங) "வாயிலிகூஃபகூஷிஜுமதீழ்-வாசிகைஞ பகூஷிம்ருகதாம்" என்று திர்யக்குக்கள் பாபயோநியாயிருக்க, புண்யம் கலசினபடி எப்படியென்னவருளிச்செய்கிறார் (திர்யக்குக்களுக்கித்யாதி)' வ்ருத்தியென்று - எல்லாஸம்பந்தங்களையும் சொல்லும். அபிதாவ்ருத்தி யென்று-வாச்யவாசக ஸம்பந்தம். சப்தார்த்தங்களுக்குண்டான தாத்பர்ய வ்ருத்தியாவது - லக்ஷணைரூபஸம்பந்தம். (கசு)

---

(க) சாந்தோ-அ-கஉ.-உ. (உ) அமரகோ- (ங) மநு.

மூ.—ஏகமூர்த்தி மூன்றுமூர்த்தி நாலுமூர்த்திநன்மைசேர்
போகமூர்த்திபுண்ணியத்தின்மூர்த்தியெண்ணில்மூர்த்தியாய்
நாகமூர்த்திசயநமாய் நலங்கடற் கிடந்தமேல்
ஆகமூர்த்தியாயவண்ணமென் னெகாலமாதிமேவினை. (கள)

பதினேழாம்பாட்டு. (ஏகமூர்த்தியித்யாதி).

| | |
|---|---|
| ஏகமூர்த்தி | பரமாஸுதேவ விக்ரஹனுய், |
| மூன்றுமூர்த்தி | ஸங்கர்ஷணதி வ்யூஹத்ரய ரூபமான மூன்று மூர்த்திகளையுடையனுய், |
| நாலுமூர்த்தி | பரமவஸ்த்ததயும் வ்யூஹங்களோடே கூட்டி நாலு மூர்த்தியாய் |
| நாலுமூர்த்தி | ப்ரதாநபுருஷாவ்யக்தகாலங்களாகிறமூர்த்திசதுஷ்டயயுக்தனுயென்றுகவுமாம். |
| நன்மைசேர் | அநுக்ரஹ ப்ராசுர்யமாகிற நன்மையோடுகூடினை |
| போக | போக்யமாயிருக்கிற |
| மூர்த்தி | விபவமூர்த்தியையுடையவனுய், (அன்றிக்கே) |
| நன்மை | ஆமுஷ்மிகத்தில் நித்யாநுபவமாகிறநன்மையோடே |
| சேர். | கூடியிருக்கிற |
| போக | ஐஹிகபோக்யமாயிருக்கிறவென்றுமாம்; |
| புண்ணியத்தின் | பாக்யாதிகருடைய ஸுக்ருதபரிபாகத்தின்பலமான |
| மூர்த்தி | அந்த விபவமூர்த்தியையுடைத்தாய், |
| எண்ணில் | ஸங்க்யாஸுசிந்யமான |
| மூர்த்தியாய் | அந்த விபவஸஜாதீயமான மூர்த்திகளையுடையனுய், |

(நாகமூர்த்தியித்யாதி)

"நலங்கடலிலே நாகமூர்த்திசயநமாய்க்கிடந்து" என்றுகூட்டுவது. [யுடைய

நலம் ப்ராவயாவதிகாவஸ்த்தாநமாகிற நன்மை

திருச்சந்த விருத்தம் கள-பா, எகமூர்த்தி வ்யாக்யாநம். திரு

| | |
|---|---|
| கடல் | கூதீர்ர்ர் |
| நாக | திருவநந்தாழ்வாணுடைய |
| மூர்த்தி | திருமேனியாகிற |
| சயநமாய் | ஸய்யையையுடையயுணர்ய் |
| கிடந்து | கண்வளர்ந்தருளி |
| மேல் | ததநந்தரம் |
| ஆக | ஆஸ்ரிதருகந்தத்ரவ்யமாகிற |
| மூர்த்தியாய் | அர்ச்சாவதாரமாய் அவதரித்த |
| வண்ணம் | ஸ்வபாவம், |
| என்கொல் | என்னையிருக்கிறது. |
| ஆதிதேவனே | காரணபூதனான ஸேஷியானவனே. (கள) |

அவ;—பதினேழாம்பாட்டு. பரமபதநிலையணையிருந்து நித்ய விபூதியை நிர்வஹித்தும், வ்யூஹம் முதலாகஸ்தாவராபர்யந்தமாக அவதரித்து லீலாவிபூதியை நிர்வஹித்தும் போருகிற வினவேயா ரொன்றே ப்ரமாணகணங்களால் பரிச்சேதிக்க வொண்ணுதிருக்க அதுக்கு மேலே அர்ச்சாவதாரஸௌலப்யத்தாலே ஆஸ்ரிதருடைய இச் சாதிநைய்க் தன்னுகியமித்த இஸ்ஸ்வபாவமென்னையிருக்கிறதே தா வென்று அதிலே விதக்தராகிறார்.

வ்யா.—(எகமூர்த்தி) (க) "வாஸுதேவோவிஸ்வரூபோ மஹாவிஷ்ணுர்" வாஸுதேவோவிஸ்வ பூர்ணச்" என்கிறபடியே ஜ்ஞாநாதிஷாட்குண்யபூர்ணனாய், நிஸ்தரங்க ஜலதிபோலேபரமபதத்திலே எழுந்தருளியிருந்து நித்ய ஸித்தருடம் முக்தருடம் அநுபவிக்கவிருக்கிற அக்விதீயமான மூர்த்தியையுடையையாய். (மூன்று மூர்த்தி) அந்தஷாட்குணங்களிலே இவ்விரண்டுகுணங்களை ப்ரகாசிப்பித்துக்கொண்டு ஜகத் ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுவைக்காகலங்கர்ஷணத்தி ருபத்தாலே மூன்று மூர்த்தியாய், (நாலுமூர்த்தி) பரவ்யூஹத்தையும் வ்யூஹங்களோடேயண்ணலாம்படி பரார்த்தமாயிருக்கையாலே அத்தையுங்கூட்டி "நாலுமூர்த்தி" என்கிறது. அதுவா, வ்யூஹகார்யமான ஸ்ருஷ்ட்யாதிகளுக்கு உபயோகமாயிருக்கிற ப்ரதாந புருஷ அவ்யக்தகாலங்களை ஸரீரமாகவுடையனாயிருக்கிறபடியைச் சொல்லுகிறதென்னவுமாம்.

(நன்மைமேசர் போகமூர்த்தி) அநுக்ரஹப்ராசுர்யமாகிற நன்மையையுடைத்தாய் ஸம்ஸாரிகளுக்கு போகயோக்யமான மூர்த்தி. அநுக்ரஹ ப்ராசுர்யமாவது - ஸ்வாஸாதாரணமாய் அப்ராக்ருதமான விக்ரஹத்தை, தேவாதி ஜாதியாமாத்மாக்கொண்டு ஸம்ஸாரிகளுக்கு சகஷுர்விஷயமாம்படி பண்ணுகை. அதாவது, ஆழ்விகத்தில் நித்யாநுபவத்தோடே சேரும் தன்மையையுடைத்தாய் ஐஹிகத்தில் போக(மோக்ஷ)யோக்யமாயிருக்கும்மூர்த்தியே பண்ணவுமாம். (புண்ணியத்தின்மூர்த்தி) அதுதான் பாக்யாதிகருடைய புண்யவிபாகத்திலேபவிப்பதாயிருக்கை. (க)"பரிதராணாயஸாயூ-நாம் - பரித்ராணாய ஸாதூநாம்" என்று - பரமபக்தி யுக்தர்க்கு ஸ்வயம் ப்ரயோஜநமாய், ஸித்தஸாதந பரிக்ரஹயுக்தர்க்கு ஸாரண்யமாயும் உபாஸகர்க்கு ஸாபாஸ்ரயமாயுமிறயிருப்பது. (உ)"போ-ஷீம்தநு-ஜாஸ்ரீதம் । வோ-மோவஜ்ஜாநகம் - மாநுஷீம் தநுமாஸ்ரிதம் । பரம்பாவமஜாநந்த:" என்று பாக்யஹீநராய் அவதாரத்துக்கு இழவாளராகச்சொல்லா நின்றதிறே. (எண்ணில் மூர்த்தியாய்) இப்படி அஸங்க்யாதமான விபவஸாஜாதிய விக்ரஹத்தையுடையயாய். (ங)"பஹு-யாவிஜாயதே-பஹு-தாவிஜாயதே" என்று ஸ்ருதி; (ச)"பஹு-தி-நி பஹு-தி-நி" என்று ஸ்வவாக்யம்; (ஞ) "சண்மம்பலபல" என்று அபியுக்தர்வாக்யம்.

(நாகமூர்த்தி யித்யாதி) இப்படி அளங்க்யாதமான அவதாரங்களைப் பண்ணினவிடத்திலும் தன் திருவுள்ளத்துக்கேறு ஸம்ஸாரிகள் தன்னைவந்துகிட்டாமையாலே உபேக்ஷித்துப்பரமபதத்திலே போகப்ராப்தமாயிருக்க, ரக்ஷணத்தில் கணையாலே திருப்பாற்கடலிலே சேர்ந்தகீர்மையைச் சொல்லுகிறது. (நலங்கடலிலாகத மூர்த்தி ஸயாகமாய்க்கிடந்து). அவதாரஸ்தலங்களிலே போலேயிலாதவாறியின்றிக்கே ப்ரளயாவதியாக விருப்பிக் கண்வளர்ந்தருளுகையாலே "நலங்கடல்" என்கிறது. திருவநந்தாழ்வான் திருமேனி

---

அரு;—பதினேழாமபாட்டு. சேரும்தன்மை சேர்க்குமென்றபடி. இவனை அநுபவத்தோடே சேர்க்கும் ஸ்வபாவத்தையுடைத்தாய். அவதாரம் உபாயமும் உபேயமுமாயிருக்கு மென்றபடி. ஆகமூர்த்தி - மூர்த்தியாக. (கஎ)

(க) கீ-சு-அ. (உ) கீ-கூ-கக. (ங) யஜு-ஆரண்-ங.
(ச) கீ-சு-ஞ. (ஞ) தி-வாய்-கூ-கo-க.

திருச்சந்தவிருத்தம் சுவாமிபரஹித்தியாய், வியாக்யானம். நி

மூ.—விடத்தவாயொராயிர மிராயிரங்கண்வெங்கழல்
விடத்துவீள்விலாத போகமிக்குசோதி தொடுத்துமேல்விதானமாய பௌவநீரரவணைப்
படுத்தபாயில்பள்ளிகொள்வதன்றுகாண்மதீயலவன்னரணே.

---

யாகிற படுக்கையிலே கண்வளர்ந்தருளி. (மேலாகழுர்த்தி யாயவண்ணமிருக்கொல்) அதற்குமேலே ஆஸ்ரிதர் தேவர்க்கு விக்ரஹமாக நினைத்த த்ரவ்யத்திலே ஸ்வாஸாதாரண விக்ரஹத்தில் பண்ணும் விருப்பத்தைப்பண்ணுகிற இஸ்ஸ்வபாவம் என்னு யிருக்கிறது. (க) "ஸ்ரீ தம்ஹஜூஷ நரயழ - ஸ்ம நுதம்மைந்கல்பதாமு யம்" என்றும் (நி) "யெபமாதோவ்ரவ்ய - யோதாமாம் ப்ர பத்யந்தே" என்றும் சொல்லுகிறபடியே - ஆஸ்ரிதர் உனக்கு விக் ரஹமாக நினைத்த த்ரவ்பத்தையிறே ஸ்வாஸாதாரண விக்ரஹத் தோபாதிவிரும்புவது. (ஆதிதேவனே) ஜகத்துக்கெல்லாம் காரண பூதனான நீ கார்யபூதனுபிருப்பாரைந சேதநனுடைய இச்சாதீந மாக உன்னைப்பண்ணுவதேயன்று கருத்து. இவ்விருப்பத்துக்கு அடியுடையவனையாலேயென்று மேலதுவாகவுடாம். (கள)

பதினெட்டாம்பாட்டு (விடத்திதயாதி).

| | |
|---|---|
| விடத்து | விஷத்தையுடைத்தான |
| வாயொராயி ரம் | ஆயிர வாயையுடைய |
| இராயிரங்கண் | இரண்டாயிரம் கண்களாலே |
| வெந்து | க்ரூரமான |
| அழல் | விஷாக்நியை |
| | புறப்படவிட்டு |
| | பகவத்விஸ்லேஷம் |
| | இல்லாத |
| போக | போகத்தையுடைய |
| | [போகம்— |
| மிக்க | அதிகமான |
| சோதி | தேஜஸ்ஸையுடைய |

---

(க) வி-பு-தி-கள-சு. (உ) தி-சு-கக.

இச திருச்சந்தவிருத்தம் சஅ பா, விடத்தவாய், வ்யாக்யாகம்.

(தொக்கசிரித்யாதி)

"விதாகமாய்மேல் தொக்கசீர்தொடுத்து" என்றகூட்

டுவது;

| | |
|---|---|
| விதாகமாய் | வீதாகாத்மகமான ப(வ)ணங்கருடை ய |
| மேல் | உபரிப்ரதேசத்திலே |
| தொக்க | திரளாயிருக்கிற |
| சீர் | அழகை |
| தொடுத்து | க்ரதி(யி)த்து |

(பௌவநீர்த்யாதி)

"பௌவநீர்படுத்தஅரவணைப்பாயில்" என்றகூட்டுவது

| | |
|---|---|
| பௌவநீர் | யமுநாஜலத்திலே |
| படுத்த | படுக்கப்பட்ட |
| அரவணை | திருவநந்தாழ்வானாகிற |
| பாயில் | படுக்கையிலே |
| பள்ளிகொள்வது | கண்வளர்ந்தருளுகிற விது |
| என்கொல் | என்னே? |
| மேலை | யமுநாஜலம்போலிருக்கிற |
| வண்ணனே | வர்ணத்தையுடையவனே! (கஅ) |

அவ;—பதினெட்டாம்பாட்டு..."காசுமூர்த்திபாயகம்" என்றும் "தடங்கடல்பணைத்தலை" "சங்கணைகணைக்கிடந்த" என்றும் அவதாரகந்தமானகூர்மாப்திபாயகம் ப்ரஸ்துதமானவாறே திருவுள்ளம்பற்றி கேதாழ்ந்து,(க) "சுயம்பிகாசாநாரஸிம்ஹமாகை – அர்த்திதாமாநுகேஷமேலாகே" என்கிறபடியே அவதாரங்களிலுண்டான அர்த்தித்வமன்றிக்கே யிருக்க விலக்ருஷ்ணாகாரத்திலே வந்து கண்வளர்ந்தருளுகிற தேவரீருடைய வாசியை ஆறிந்து ஆஸ்ரயித்துக்காரியங்கொள்ளவென்கிறார்.

வ்யா;—(விடத்தவாயொராயிரம்) விஷத்தைக உமிழ்தலின்றுள்ள ஆயிரம் வாயையுடையவனே. (இராயிரங்கண் வெங்கழல் விடுத்து) இரண்டாயிரங்கண்ணுதலும் வெவ்விய அழல்லப்புறப்படவிட்டு, பகவத்ருபவமேயாத்ரையாயிருக்கிற திருவநந்தாழ்வானுக்கு கோரஷகார்யமான இந்தக்கொளர்ய முண்டாவதென்னென்னில்; அஞ்

(க) ரஹ-ஆயோ-க-வ.

திருச்சந்த விருத்தம் கஅ-பா, விடத்தவாய், வ்யாக்யாநம். நிறை ப்ரக்ருதிகள் ஸஞ்சரிக்கிற தேசத்திலே கண்வளர்ந்தருளுகிற விவ ணுக்கு ஆராலேயென்னவருகிறதேதாவென்னும் மதிஸாங்கையாலேவந் தது. அநுபவம் ராககார்யமானவோபாதி ப்ரதிகூலஸ்தலத்திலே த்வேஷமும் ராககார்யமிறே. இத்தால் - துஷ்ப்ரக்ருதிகளுக்குக் கணிசிக்கவொண்ணாதபடி திருவநந்தாழ்வானாலே ஸுரக்ஷிதனாய்க் கண்வளர்ந்தருளப்பெற்றேனென்று க்ருப்தராகிறார். (வீவ்விலாத் போகம்) ஈஸ்வரன் அணைத்தால் ஒருவகையாலும் பிரியமில்லாண் ணாதிருவுடம்பையுடையனாய்; (க)"ஸுநஸஹோமிநி-அகந்தபோகி நி" என்றுதிருவநந்தாழ்வானுடைய திருமேனியை "ஸோமழி-போக ம்" என்னக்கடவதிறே. இத்தால் - ஆத்மகுணங்களாலே ரக்ஷகனா னப்போலே ரூபகுணங்களாலே போக்யபூதனானபடியைச் சொல் லுகிறது. (மிக்கசோதி) இப்படிகிஞ்சித்கார பூதனாய்க்கொண்டு உன்னை அநுபவிக்கையாலேவந்த நிரவதிகதேஜஸ்ஸையுடையனாய். (தொக்கசீர்தொடுத்து மேல்விதாநமாய்). விதாநமான பண ங்கள் பலவற்றிலே யுண்டான மிக்க வழக்கைத்தொடுத்து. தொ க்கு-திரட்சி. சீர் - அழகு. இத்தால்--ஸ்பர்ஸத்தால் வந்த அநு பவமேயன்றிக்கே, தர்ஸநீயமாய் நாநாவர்ணமான பணங்களினழ கைச் சேர்த்தநுபவித்துக்கொண்டு கண்வளர்ந்தருளுகிற படியைச் சொல்லுகிறது. (பௌவநீராராவணைப் படுத்-சுபாயில்) கடல் நீரில் அது உறுத்தாமைக்குப் படுத்த திருவநந்தாழ்வானுகிற படுக்கை யிலே. (பள்ளிகொள்வதென்கொல்) கண்வளர்ந்தருளுகிறவிது வென்னே. தங்களாபத்துக்கு உதவுகைக்கு ப்ரஹ்மாதிகள் அர்த் திக்கத்தான் செய்தருளினிற்கிறே. (வேலைவண்ணனே) வெள்ளைக்கட லிலே ஒரு நீலக்கடல் சாய்ந்தாப்போலே தேவரீருடைய பரபாக (ஹாம)ரஸத்தைச்சிலர் அறிந்து அநுபவிக்கைக்காகச்செய்தருளினி ற்கிறே. இப்பாட்டில் - திருவநந்தாழ்வானேட்டை யநுபவத்தைச் சொல்லிற்று, - அடிமைசெய்வாரில்லாமையன்று, ஸம்ஸாரிகளினழ வைப்பார்த்து, பரார்த்தமாகக் கண்வளர்ந்தருளுகிற தென்று ன்றுகைக்காக.

(கஅ)

(க) ஸ்தோ-ர-ஙக.

மூ.—புள்ளதாகிவேதநான்கு மோதிணையதன்றியும்
புள்ளின்வாய்பிளந்து புட்கொடிப்பிடித்த பின்னரும்
புள்ளையூர்தியாதலால தென்கொல் மின்கொள்மேமியாய்
புள்ளின்மெய்ப்பகைக்கடல் கிடத்தல்காதலித்ததே. (௧௯)

பத்தொன்பதாம்பாட்டு. (புள்ளதாகியித்யாதி).

இப்பாட்டில் வாக்யத்வயம்; அதிலே "புள்ளின் வாய் பிளந்து அதன்றியும் புட்கொடிப்பிடித்தபின்னரும் புள் ளையூர்தி மின்கொள் மேமியாய், ஆதலால் புள்ளதாகிவே தநான்கு மோதிணைப்" என்று ப்ரதமவாக்யம்; அநந்தரம் "கடல் புள்ளின்பகை மெய்க்காதலித்துக்கிடத்தல் அ தென்கொல்" என்றுத்தரீயவாக்யம்.

| | |
|---|---|
| புள்ளின் | பகாஸுரனுகிற பக்ஷியினுடைய |
| வாய் | மூக்கை |
| பிளந்து | பே(ஹ)தித்து |
| அதன்றியும் | அவ்வளவன்றிக்கே |
| புள் | பெரிய திருவடியை |
| கொடி | த்வஜத்திலே |
| பிடித்தபின் | பிடித்தவளவன்றிக்கே |
| அரும் | அந்யஸாலபணை |
| புள்ளை | திருவகுத்தாய்த்வாஹனை |
| உளர்தி | வாஹநமாக நடத்தாநின்றாய், |
| மின் | தேஜஸ்ஸை |
| கொள் | ஸ்வீகரியாநின்ற |
| மேமியாய் | திருவாழியாழ்வாஹனயுடையவனே! |
| ஆதலால் | இப்படிநிருபாதிகரக்ஷகனைகயாலே |
| புள்ளதாகி | ஹம்ஸாவதாரத்தைப்பண்ணி |
| வேதநான்கும் | நாலுவேதத்தையும். |
| ஓதினாய் | உபதேசித்தாய்; |
| கடல் | திருப்பாற்கடலிலே |
| புள்ளின் | பெரியதிருவடிக்கு |
| பகைமெய் | ஸஹஜமாத்ருவாய்த் |
| | வந்தாழ்வான்மேலே |

காதலித்து அவர்களை அஞ்யோந்யாநுரக்தராக்கி அடிமைசெய்யும்படி பண்ணிக்கொண்டு
கிடக்கல் } கண்வளர்ந்தருளுகிறவதுவன்றோ? (௪௯)
அதன்கொல் }

அவ;—பத்தாண்டுகாம்பாட்டு. அர்த்தித்வ நிரபேக்ஷமாகக் கண்வளர்ந்தருளுகிறவிது என்ன நீர்மையென்றார் கீழ்; இங்கு, பன்னிண ஜகத்ரக்ஷணங்களைக்கண்டு, (க) "நஹிவாலநவாஜ்ஞ-ஹ்ரு திதவஸவிவ-ஹ்ஸாம ஹரிந்தி - நஹிபாலநவாமர்க்கயம்ருதேஸர்வேஷ்வரம்ஹரிம்" என்கிறபடியே பாலநகர்மத்துக்கு வேறு ஸஹாயமில்லாமையாலும், ஜகத்து தேஹரீர்க்ஷ அநந்யார்ஹஸ்வாமிகையாலே ரக்ஷிக்குமிடத்தில் அர்த்தித்வம் மிகையாகையாலும், வந்து கண்வளர்ந்தருளுகிற தித்தனையென்று அந்த ரக்ஷணங்களைப்பேசி, ஸாமாந்யத்ருஷ்டியால் ஸஹஜஸஹ்ருக்களாய்த்தோற்றுகிற பெரியதிருவடியும் திருவநந்தாழ்வானும் எகண்ட்டராய் தேவர்க்குப் பரியும்படியாகக் கண்வளர்ந்தருளுகிறவிது என்ன ஆச்சர்யமென்கிறார்.

வ்யா.—(புள்ளதாகி வேதநான்குமோதினை) வேதத்தினுடைய அபௌருஷேயத்வஸித்திக்காக ஸ்வாஸாதாரண விக்ரஹத்தை திவ்யக்ஸஜாதீயமாக்கிக்கொண்டு ஹம்ஸாவதாரத்தைப்பண்ணி, தத்வஹிதங்களுக்கு ஜ்ஞாபகமான சதுர்வேதங்களையும் ஜகத்தில் அஜ்ஞாநாந்தகாரமெல்லாம் நீங்கும்படி யருளிச்செய்தாய். (உ) "ஆதநவ்ருத்தீவிவகாரஸ்ருஷ்டிகா உஷாதி - மாதம்ப்ரதீபமிவகாருணீகோததாதி" என்னக்கடவதிறே. (அதன்றியும்) ஸஹஜஸத்ருவான அஜ்ஞாநத்தைப் போக்கினதற்குமேலே, (புள்ளின்வாய்பிளந்து) பகாஸுரன் வாயைக் கிழித்து, இத்தால் - ப்ரமாண ஜ்ஞாநத்தாலே அஜ்ஞாநாந்தகாரத்தைப்போக்கினைப்போலே, பகாஸுரனை நிரஸித்து ப்ரமேயபூதனை தன்னேற்றத்தை, ஆஸ்ரிதர்க்கு ப்ராணப்ரதிஷ்டை பண்ணினாப்படியைச்சொல்லிற்று. (புட்கொடிப்பிடித்தபின்னருளும் புள்ளூர்தி) தன்பக்கலிலே ஆச்ரயங்களவத்து காரியங்கொள்ளுமப்படி பெரியதிருவடியை ரக்ஷணதர்மத்துக்கு த்வஜமாகப்பிடித்து, அவ்வளவுமன்றிக்கே, ஆஸ்ரிதரிருந்த விடங்களிலேவந்து உதவுகைக்கு அவனே வாஹநமாகக்கொண்டு கடத்தா

(க) வி-பு-க-உ௨-உ௪. (உ)

மூ.—கூசமொன்றுமின்றி மாசுணம்படுத்து வேலைநீர்
பேசநின்றதே தவர்வந்து பாடமுன்கிடந்ததும்
பாசநின்றநீரில்வாழு மாமையான கேசவா
ஏசவன்று நீ கிடந்தவாறு கூறு தேறமே. (உ0)

(மின்கொள்மேனியாய்) திருநிறக்கருப்பைக்கொடையாய் மின்னுகின்ற திருவாழியையுடையவனே! இக்கால் - ரக்ஷகத்வமே நிரூபகமென்று தோற்றும்படி *கைகழலா மேனியாளையிருக்கிற படியைச் சொல்லிற்று. (ஆகலால்) நிரூபாதிகரக்ஷகனைகையாலே "புள்ளதாகி வேதநான்கு மோதினாய்" என்று கீழோடே அந்வயம். "அதென்கொல்" என்கிறவிது பாட்டின் முடிவிலே அந்வயம்; (புள்ளின்மெய்ப்படைகைக் கடல்கிடத்தல் காதலித்தது - என்கொல்) ராமாவதாரத்திலே பார்த்தால் திருவடிக்குஸுஹ்ருத்தாய் வெண்ணலாயிருக்கிற திருவநந்தாழ்வான்மேலே திருப்பாற்கடலிலே இருவருங்கூடவிரும்பி அடிமை செய்யும்படி கண்வளர்ந்தருளுகிறவிது என்கொலோ. ராவணவதத்திலே புத்தி பண்ணியிருக்கும்ஸம்ஸாரத்திலே இருவரையும் ஏகாகண்ட்டராக்கி அடிமைகொண்டவிது, தேவரீருடைய ஸர்வாபேக்ஷித்வத்தை ப்ரகாசிப்பிக்கைக்காகவோவென்று கருத்து. அநாதியாய் அநவதிகாதிசயமான விரும்பிப்போக்கு சேதநனை, ஸுஷ்டைகரஸமான நித்யஸூரிகளோடே ஒரு கோவையாக்குவது இப்ப்ரபந்தியிறே, ... ... (உஉ)

## இருபதாம்பாட்டு (கூசமொன்றுமின்றி)

கூசம் "ஆராலென் வருகிறதே" என்று
கூசம்
ஒன்றுமின்றி ஒன்றுமில்லாமல்
மாசுணம்படுத் திருவநந்தாழ்வானை விரித்து
து
வேலைநீர் ஸமுத்ரஜலம்
பேச கோஷிக்க,
(அன்றிக்கே)

அரு.—பத்தொன்பதாம்பாட்டு. "கடலிலே காதலித்துக் கிடத்தல் என்கொல்" என்றந்வயம். (உஉ)

ச்சந்தவிருத்தம் ஊ-டா, கூசமொன்றும் வ்யாச்யாகும். நிகழ

("வேலைநீர்மாசுணம்படுத்து" என்றுகூட்டி "பேதுறின்ற"
என்றுகூட்டுவது)

பேச ஸ்தோத்ரம் பண்ணுகைக்காக
நின்ற வ்யவஸ்திதரான,

("நீர்பேச" என்கிற பூர்வாக்ய பதத்திலே)

நின்ற ஜகத் ரக்ஷணத்திலே வ்யவஸ்திதராய
தேவர் ப்ரஹ்மாதிகள்
வந்து ஊர்த்வலோகங்களில் நின்றுமுள்வந்து
பாட ஸ்தோத்ரம் பண்ணும்படி
மூண் ஸ்ருஷ்டிகாலத்துடங்கி
கிடந்ததும் கண்வளர்ந்தருளுகிற ப்ரகாரமும்
பாச பாசங்கள்
றின்ற நிற்கிற
நீரில் ஸமுத்ர ஜலத்திலே
வாழும் ஹ்ருஷ்டஜனை

(அன்றிக்கே)

பாசம் ப்ரேமம்
நின்ற நிற்கிற
நீரில் ஸமுத்ர ஜலத்திலென்னவுமாம்.
வாழும் ஹ்ருஷ்டஜனை
ஆணையான கூர்மவராஹாதியவதரித்த
கேசவா ப்ரஹ்மருத்ரோத்பாதகனே!
ஏச உன்படி அறியாதாரேசும்படி,
அன்று தேவதைகள் ஸாபேக்ஷராய்நின்றவன்று
நீகிடந்தவாறு நீ, மந்தரம்முதுகிலே சுழலக்கண்வளர்ந்
தருளுகிற ப்ரகாரத்தை
தேற தெரியும்படி
கூறு அருளிச்செய்யவேணும்.

"கூசமொன்றுமின்றிகூறு" என்று கூட்டவுமாம்

கூசமொன்று அதிகாரிவிரோதத்தால்வந்த கூசமேதுமில்
மின்றி லாமல்
கூறு அருளிச்செய்யவேணும். (உ0)

அவ;—இருபதாம்பாட்டு. ப்ரயோஜநாந்தரபரரான ப்ரஹ்ம மாதிகளைத்தத் திருப்பாற்கடலிலேகண்வளர்ந்தருளுகிற இம்மேனமைதானே நீர்மைக்கெல்லைநிலமாயிராநின்றது; அம்ருதமதநவேளையில் மந்தரதாரணார்த்தமாக ஆமையான நீர்மைதானே மேன்மைக்கு எல்லைநிலமாயிராநின்றது, இவைகளைப்பிரித்து என்னெஞ்சிலே படவருளிச்செய்ய வேணுமென்கிறார்.

வ்யா;—(கூசமென்னும்பின்றி)மாப்ரகுஹலரான அஸுரராக்ஷஸர் பெருஞ்சாரிக்கிறதேதசம், ஆராய்ந்து பயன்வருகிறதேதான் என்னும் ஒரு கூசமின்றியே யென்னுதல்; பிராட்டிமாருக்கும் அடுத்துப் பார்க்கப்படுகிறதெய்தாரமானவடிவு தேவப்ரக்ருதிகள் விஷயீகரிக்கும்படிக்கு விஷயமாகிறதீதாவென்னுமேவகாரம் கூசாதே யென்னுதல், அதாவது "கூசமென்னும்பின்றி-கூறுதேறமேவும்" என்று அந்வயித்து, தன்படிகளைச் சொல்லுகைக்கு அதிகாரிகளில்லையென்னும் அதிகாரவிரஹமறிந்து கூசாதேயென்றுமாம். அதாவது - மேன்மையையச் சொல்லி தேவப்ரயோஜநமென்னும் அகலுதல்; நீர்மையைச் சொல்லிக் காற்கடைக்கொண்டாகலுதலென்னுகை. (மாசுணம்படுத்து) நீருறுத்தாமே திருவநந்தாழ்வானை விரித்து. (வேலைநீர்பேச) ஸ்வஸங்கிதாநத்தாலே வந்த ப்ரீதியாலே கடல்நீர் கோஷியாநிற்க. (நின்றுமேதவர்) ஜகத்ரக்ஷணை தர்மத்திலே வ்யவஸ்தாபகராய் நின்ற ப்ரஹ்மாதிகள். பேசநின்றமேதவரென்றுமாம். (க)"பேசநின்றசிவன்" என்னக்கடவதிறே., (வந்துபாட)ஊர்த்வலோகங்களில் நின்றும் வந்துதந்தாழுலைடைய அபிமதஸித்திக்காக ப்ரீதிப்ரேரிதராயேத்த. (ழுன்கிடந்ததும்) ஸருஷ்டிகாலமேமுதலாகக் கண்வளர்ந்தருளுகிறவிதுவும்; ஸ்ருதிகோஷத்தோடும், ப்ரயோஜநாந்தரபரரான ப்ரஹ்மாதிகளுடைய ஸ்மிருதிதர்கத்தோடு, அந்ய ப்ரயோஜநரான ஸ்வேதத்வீபவாஸிகளுடைய ஸ்மிருதிதர்கத்தோடு வாசியற முகங்கொடுத்து நிற்கிறவிது என்ன ஸ்ரீயென்னுமது கருத்து.

(பாசநின்ற நீர்ஸ்வாழுமாமையானகேசவா) ஸ்ருத்ரமதகலேவோளையில வருணபாசங்களை யுடைத்தான கடலிலே முதுகிலே மந்தர

---

அ ந.—இருபதாம்பாட்டு. ஆமையாயிருக்கச்செய்தேயும் "கேசவா" என்னலையாம்ப (ப்ரயோஜநாந்தரபரமாக) என்கிறது. "மாசுணம்" பெரும்பாம்பு. "பேசநின்ற" ப்ரயோஜநாந்தரபரமாகப் பேசநின்ற. கடல்வருணனுக்கு இருப்பிடமாலையாம்ப அவதூலமையுடைய ஆயுதத்தையுடைத்தாயிருக்கை. பாசம்-ஆயுதம். ப்ரஹ்மாதிகளை ஸ்ருஷ்டிக்கும்போது பலவாக்கிடக்கிற மேன்மையிலே ஆழ்ந்தவனை ஸ்ருஷ்டிக்கையாகிற நீர்மைக்கு மேட்பட்டிருக்கையாலே கடல்வண்ணனாய நீர்மை ப்ரகாசிக்கிறது.

மூ.—அரங்கனே தரங்கநீர் கலங்கவன் றுருண் டுசூழ்
மரங்கள்சேய மாநிலங்குலுங்க மாசுணா ருசுவாய்ப்
பொருங்கரீகளைடுந்தி பாது தின றகூரமரன்மசய்தார்
குரங்கையாருகந்த வெல்லை கூடுமேசுறவேறினே.

ரம் சூழுகிற விது ஸ்வப்பதேபாஜ்யமாக நினைத்துக்கூர்மஸ்வரூபியாய
னவனே! "பாசநின்றநீர்" என்று-பரமபதத்திற்காட்டில் ப்ரேமஸ்வ
தலமான கடலிலேயன்னவுமாம். கேசவாவென்றது-ப்ரஹ்மாதிக
ள்சரணம்புகுர, தத்ரக்ஷணார்த்தமாக கூர்மஸ்வரூபியாயலை அ
வ்வளவாலும்ப்ரஹ்மருத்ராதிகளுக்கு உத்பாதகனானேயன்மைய அழி
யாதிருக்கிறபடி. (ஏசவன் றுநீ கிடந்தவா று) தேவமநுஷ்யதிர்யக்ஸ்தா
தேகூராய் நின்றவன் று ஸர்வாதிகனானநீ, உன் படியறியாதார் "ஓ
ணையாரனை!" என்றுஉன் னுடையாரேயசும்படி, மந்தரம்முதலிலே
நின்றுசுழலக் கண்வளர்ந்தருளின ப்ரகாரம். (கூடுமேதகுமே). தொ
யும்படி யெனக்கருளிச் செய்யவேணும். ஆனமயான நிர்மையிலே
ஸர்வாதிகத்வமும் ப்ரகாசியாநின்றது, ப்ரஹ்மாதிசேஷத்தக் கண்
வளர்ந்தருளுகிற விடத்திலே நிர்மைப்ரகாசியா நின்றது. இவற்
றைப் பிரித்துத்தெரிய வருளிச்செய்யவேணுமென்று கருத்து (உரை)

இருபத்தோராம்பாட்டு (அரங்கனிர்யாதி)

"அரங்கனே" என்கிறவிடம்தேபாதகம் வாக்யாந்தரத்தையை
யோடே கூட்டுவது.

| | |
|---|---|
| தரங்க | அலைகளையுடைத்தான |
| நீர் | ஸமுத்ரமான து |
| கலங்க | கலங்கப்(ஐ)மாக |
| குன்று | மந்தர பர்வதத்தை |
| சூழ் | சூழ்ந்த |
| மரங்கள் | வ்ருக்ஷங்கள் |
| தேய | வாலொடு மெங்கட்டாகத்தாலே உலைய |
| மா | மஹாத்தான |
| நிலம் | பூஷ்கரத்வீபபூமி |
| குலுங்க | அலைய |

(மாசுணையர்யாதி)

"திருந்துமாசுணம்சுலாயிப்" என்றுகூட்டி,

| | |
|---|---|
| நெருங்க | நெருங்கும்படி |
| மாகூணம் | வாஸுகிபை |
| கூலாய் | சுலாவி; சுற்றியென்றபடி; |
| நீகளைடந்தோ | நீயும்ருகமதநம் பண்ணோபாதே |

தி

"அன்று" என்றுப்ரதமபாதஸ்தத்தை இங்கேகூட்டுவது.

| | |
|---|---|
| அன்று | தர்வாஸுப்ரபாபத்திலேலங்ஷ்டஸ்ரீகரா |
| | னேகவலைதகள்னைகவாங்கினிற்றவன்று. |
| நின்றசுரர் | நின்றதேவர்கள் |
| என்செய்தார் | மந்தராத்ரிஷ்டோதகவாதிகளிலே எந்த |
| | னைதச் செய்தார்; |
| குரங்கை | வாநரங்களை |
| ஆருகந்த | ஜயபரீலரென்றுநாரித்த |
| என்னை | என்னையனை |
| அரங்கனே | திருவரங்கத்தாய்! |
| இது | இத்தை |
| வேறு | விபரிக்ஷ்ய |
| தேற | அறியும்படி |
| கூறு | அநுஸந்தித்செய்யவேணும். (உக) |

அவ;—இருபத்தோராம்பாட்டு, ஸமுத்ரமதநவேளையில் ஆமை யான நீர்மைக்குமேலே ஸகல வ்யாபாரங்களையும் தேவரீரே மேற் தருளி, "தேவர்கள் கடல் கடைந்தார்கள்" என்று தேவர்கள் தலை யிலே யேறிட்டுக்கொண்டாடினபடி, ராவணனை தேவரே அழியச் செய்து முதலிகள் தலையிலே விஜயத்தைதேயேறிட்டுக்கொண்டாடி னபோலேயிருந்ததே யென்று இவ்வாஸ்ரித பக்ஷபாதத்தை வெறு கத்தெரியவநுஸந்தித்செய்யவேணுமென்கிறார். ஸம்பந்தம் ஸாவஸா தாரணமா யிருக்க இதொருபக்ஷபாதமிருந்தபடி யென்னென்று விஸ்மிதராகிறார்.

வ்யா.—"அரங்கனே" என்கிறவிது விபரிக்ஷ்யமாகையால் க்ரி யையோடே அந்வயிக்கக்கடவது.(தரங்கநீர்கலக்க) (க)"சமுத்ரமே

அரு;—இருபத்தோராம்பாட்டில். (ஸர்வஸாதாரணம்) தேவர்களுக்கும் அஸுரர்களுக்கு மொத்திருக்கை. நெருங்கக் கட்டிக் கடைகையாலே வாஸு

(க) ஸ-யு-கக-டீகை. † வ்யாக்யாநாநுஸாரம்.

யொஜிஹாஉயிஃ - அப்ரமேயாமதேஹாதிஃ" என்கிறபடியே அத்யகாதமான கடலாகையாலே கண்ணயறுபவிக்க விழிக்காலைக் கரையிலே † யேறிட வல்லதிரைக்கிளர்த்தியையுடைத்தான ‖ கடல் குளப்படிபோலே கலங்க. / (அன்று) ஸகலதிசைகளிலுமுள்ள தார்வாஸ்ஸ்தாபத்தாலே நஷ்டஸ்ரீகராய்த் தங்களிஸ்வர்யத்தைக்குறித்து ஸைபார்த்து நின்றவன்று. (குன்றுசூழ்மரங்களேதைய) மந்தரத்தைச்சூழ்ந்த மரங்கள் வாஸுகியுடல்பட்டுத்தேய, (மாநிலங்குலுங்க) ஸமுத்ர கோஷத்திலுண்டைய அதிசயத்தாலே அத்தேசத்தே சேர்ந்த புஷ்கரத்வீபங்களாகிற மஹாப்ருத்விகுலுங்க, (மாசுணம் சுலாய்நெருங்க)[நெருங்க-மாசுணஞ்சுலாய்] வாஸுகியை நெருங்கச்சுற்றி. சுலாய்—சுலாவி, சுற்றியென்றபடி; / ஸ்வதேஜஸ்ஸாலே உபப்ரும்ஹிதமானபடியாலே கூசாதே மந்தரத்திலே வாஸுகியை நெருங்கச்சுற்றி.(க)"ஜஹாரஉராயிஷ்டாநம் ஸ்ரஷ்டிதாஸ்ருஷ்டிஸம்ஹாரகாரதிஷ்டாநம் ப்ரமேதாபூக்" என்று மந்தரத்துக்கு அதிஷ்டாநமும் காணையென்றும்,(உ)"திதிஜஸ்ரஸமாஜாநம் தயாவ்யாபிதவாங்ப்ரபுஃ" என்று வாஸுகிக்கு ப(வெ)லகாணும் காணையென்றும்சொல்லிக்கடவதிறே.

(நீகடைந்தபோது)(ங) "திதாஜயிதஸ்ஸாஸுரஸ்ஸாஃ-தேதாமதிதமாரப்தாஃ." என்று-தேவர்களுக்கு ஆரம்பமாத்ரமேயாய், (ச) "ஆபிரஹ்மதாளாலகடல்கடைந்தான்" என்கிறபடியே அக்கடலே தேவரீரேகடைந்தபோது(நின்றசூரரென்செய்தார்) அதிபலபராக்ரமரான தேவர்களும் அஸுரர்களும் செய்ததென்? அம்ருதமதனமாத்ரத்தை தேவர்கள்பக்கலிலே யேறிட்டுக்கொண்டாடுகைக்கு அவர்கள்செய்த கார்யமென்? கூர்மரூபியாய் மந்தராத்ரிக்கு அதிஷ்டாநமாஸ்ரயித்தளவேயன்றோ; (ஞ) "உவர்ஆகராணவாநுவிஸ்ருஷ்டவிஷஜ்வாலாவிஷ்வக்வேணகபாலவஃ - உபர்யாக்ராந்தவாங்ஸ்ருஷ்டபாலம் ப்ருஹதகருவேணகபாலவஃ" என்றுமந்தரம் சலியாதபடி நோக்கினரன்றோ; தேஜஸ்

---

க்கு ஸாக்தியுண்டோவென்ன வருளிச்செயகிறார் ‖ ஸ்வதேஜஸ்ஸாலே யித்யாதி). / (உபப்ரும்ஹிதம்) பெருக்கப்படிகை. / நின்றசூரர் - பராக்ரமமாதல்,

---

(க) வி-பு-க-கூ-அ. (உ) வி-பு-க-கூ-கூ. (ங) வி-பு க-கூ-அ.
(ச) தி-மஹா-ரு-எ-ச. (ஞ) வி-பு-க-கூ-கo. † (பா) எறட-வல்ல.

மூ.—பண்டுமின் றுமேலுமாயோர் பாலனாகி ஞாலமேழும்
உண்டுமண்டியாலிலைத் துயின்றவாதிதேவனே!
வண்டுகிண்டுகண்டுழாயலங்கலாய்! கலந்தசீர்ப்
புண்டரீகபாலை சேருமார்ப! பூமிநாதனே, (உஉ)

---

ஸாலேவாஸுகிக்குபலகராலர்கோளா;ப(ஹ)லபோ(ஹா)க்காக்க ளாய் நின்றவிதுவேறதுவாக அவர்களிடைபுகுந்தாக்கலுறு மாக்கினை வித்தனையன்றே.(க)''ஏவஞாநயவிதநவுஸுகாஜுகதிநிதந -தேவதாகவயத்தோந ப்ரஸுதாம்ருதமந்தரே''என்று அம்ருதமதந வ்யாபாரம் அஸுராக்குமொத்திருக்க அவர்களிடைக்லே ஸு(ஹாமி) பாகிகளாக்கி தேவர்களை அம்ருதபாகிகளாக்கின விதவும் அதற்கு மேலேயொரு பக்ஷபாதமிறே. ப்ரயோஜநாந்தர பரனென்றுபாராதே தேவர்கள்பக்கல் பக்ஷபாதத்துக்கடி, (உ) ''ஸரணகூடி நஸ்வாஹா - ஸரணம் த்வாமநுப்ராப்தாஃ'' என்று ஸரணமென்றவி தவேயிறே.

(குரங்கையாளுகந்தவெங்கை) கீழ்ச்சொன்ன பக்ஷபாதத்தாற் ருஷ்டாந்தம் சொல்லுகிறது. ராவணனை தேவரீரே யழியச் செய்து, ப்ரதிபக்ஷத்தை யென்று தந்தார்களாக ஸ்ரீவாநரவீரர் களை ஆதரித்தாப்போலே.''எந்தை'' என்று-நித்யஸூரிகளை அடிமை கொள்ளுமேற்றத்தை யுடையனாய்வைத்து,''தீர்ப்பக்குக்கள்'' என் றிதுழாதே தஅடிமைகொண்டவிந்தைதக்கம்போடறுகினைத் திருக்கை யாலேயென்னுதனே யென்கிறார். (அரங்கனே- கூறுதே தறிவெறிதே) ''ஸர்வரன் ஒருவனுளன்'' என்று அறியாத ஸம்ஸாரத்திலே இவ் வாஶ்ரிதபக்ஷபாதத்தைப்ரகாஶிப்பிக்கைக்காக அர்த்தியாய் வந்து கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற தேவரீர் இத்தை விசேஷித்துத் தெரியவருளிச் செய்யவேணும். கீழ் - வ்யூஹத்திலும் விபவத்தி லும் சொன்னபக்ஷபாதங்கள் காணலாவது பெரியபெருமாள் பக்க லிலே யென்று கருத்து. ... ... ... .... (உக)

இருபத்திரண்டாம்பாட்டு (பண்டுமிக்யாதி)

பண்டும் ஸ்ருஷ்டேஃ பூர்வகாலமென்ன,
இன்றும் ஸ்ருஷ்டிகாலமென்ன,

---

ஶரராதல். (அதுக்குமேலே) தான் கடைந்து அவர்கள்மேலே எறிட் டதுக்குமேலே.

---

(க) வ்-பு-த-கூ-கசக. (உ) வ்-பு-த-கூ-

| | |
|---|---|
| மேலும் | ப்ரளயகாலமென்ன, (இவற்றிலே) |
| ஆய | ரக்ஷகனானவனே! |
| ஓர் | அத்விதீயமான |
| பாலனாகி | ஶிஶுவாய், |
| ஞாலமேழும் | பூலோகப்ரப்ருதி ஸப்தலோகங்களையும் |
| | "மண்டியுண்டு" என்றுகூட்டுவது. |
| மண்டி | விரும்பி |
| உண்டு | அமுதுசெய்து |
| | வடதளத்திலே |
| | கண்வளர்ந்தருளின |
| | காரணவஸ்துவான |
| தேவனே | ப்ரகாஶகனே! |
| வண்டு | ப்ர(ஶ)மரங்கள் |
| கிண்டு | கிளரும்; பறக்குமென்றபடி; |
| தண் | ப்ரமஹரமான |
| துழாயலங்கலாய் | திருத்துழாய் மாலையுடையவனே! |
| கலந்த | நித்யஸம்ஶ்லிஷ்டையாய் |
| சீர் | கல்யாணகுணங்களையுடையளாய், |
| புண்டரீக | தாமரைப்பூவை ஜந்மபூமியாகவுடையவ |
| | ளாய். |
| பாவை | நிருபாதிகஸ்த்ரீத்வத்தையுடையளான |
| | பிராட்டி |
| சேரும் | நித்யவாஸம் பண்ணுகின்ற |
| மார்வ | திருமார்பையுடையவனே |
| பூமிநாதனே | ஶ்ரீபூமிப்பிராட்டிக்கு நாதனானவனே! |

"இப்படிப்பட்ட தேவர்க்கு ஆஶ்ரிதவத்ஸலரென்னுமிது ஓரேற்றமோ" என்று வாக்யஶேஷம். (உஉ)

அ.—இருபத்திரண்டாம்பாட்டு. ப்ரளயாபத்திலே வராஹ யாதியெல்லாரையும், வடதளஶாயியாய் ஸர்வஶக்தித்வந்தோற்ற சிறிய திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்த தேவரீருக்கு "ஆஶ்ரித விஷயத்தில் வத்ஸலர்" என்னுமிது ஓரேற்றமோ வென்கிறது.

வ்யா;— (பண்டுமின் றுமேலுமாய்) "பண்டு" என்கிறது— ஸ்ருஷ்டேஃ பூர்வகாலத்தை; "இன்று" என்கிறது-ஸ்ருஷ்டி-காலத்தை; "மேல்" என்கிறது—ப்ரளயவேளையை. (க) "யஸ்ய ஹொரெஜூஃ ஜுஹ்வதி ஸூர்யே - ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத்" என்கிறபடியே நாமரூபங்களை இழந்து அசித்விசேஷிதமாய் போக்ய(வ்ய)தயாபந்நமான ஸகலபதார்த்தங்களையும், (உ) "தேவைகீலு வதி - தமஏகீபவதி" என்கிறபடியே தன் பக்கலிலே ஏறிட்டு நோக்கியும்; ஸ்ருஷ்டிவேளையில் கர்மாநுரூபமாகஸ்ருஷ்டித்தும், தத்தநுரூபமாக ரக்ஷித்தும், ப்ரளயங்கொள்ளுமளவில் வயிற்றிலே வைத்துநோக்கியும் போருமவளுகையாலே. "ஆய்" என்றது-ஆகையாலே யென்று ஹேதுகர்ப்பமாய்க்கிடக்கிறது. (ஓர்பாலுறுகி) அத்விதீயமான முக்த்த ஸிசுவாய். (ஞாலமேழு முண்டுமண்டி-) ஸகலலோகங்களையும் தன்பேறுகவிரும்பியமுதுசெய்து. நியவயிற்றிலே ஸகலலோகங்களையுமடக்கின அக(வ)டிதக(வ)டாஸாமர்த்த்யத்தால்தேவரீருடைய ஐஸ்வரமானஶக்தியைப்ரகாசிப்பித்தபடியிறேயிது. (ஆலிலைத்துயின்ற வாதிதேவனே) ஒருபவளனை ஆலிலையிலே ஜகத்காரணவஸ்துவென்று தோற்றும்படி கண்வளர்ந்தருளினவனே.

(வண்டுகின்ற தண்டுழாயலங்கலாய்) இப்படி ப்ரளயார்ணவத்திலே பரிவரொருவரின்றிக்கே தனியே கண்வளர்ந்தருளுகிறவன் ஸர்வாதிகன் கிடீரென்கிறது இப்பாட்டில் ஸுஷ்டம். செவ்வியாலே வண்டுகள் புக்குப்பருகும் ஸ்ரமஹரமான திருத்துழாய்மாலையையுடையவனே; கிண்டல்—கிளர்தலும், கிழித்தலும். இத்தால்-ஆதிராஜ்யஸூசகமான திருத்துழாய்மாலையையுடையவனென்கை.

(கலந்தசீர்ப்புண்டரீகப்பாலைவேசருமார்ப) ஸ்வரூபநிரூபகதர்மங்களையாகையாலே நித்யஸம்ஸ்லேஷஸ்வபாவையாய், காமனைப்பூவை ஜந்மபூமியாக வுடையளாய், நிருபாதிகஸ்த்ரீத்வத்தையுடைய பிராட்டி, (ங) "அகலகில்லேனிறையும்" என்று அவள் ஆசங்கிக்கும்படி ருமார்பையுடையவனே. (பூமிநாதனே.) ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு நாதனானவனே. இத்தால் - (ச) "ஹீஶ்ஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" என்கிறபடியே ஸ்ரீபூமிநாதனை எற்றத்தையுடையவனென்கை. இப்படி ஸர்வாதிகன் கிடீர், ப்ரளய

---

(க) சாந்தோ-சு-உ-க (உ) ஸுபால-உ (ங) தை-வாய்-சு-க0-க0 (ச) யஜு-வா-ரு-ங

திருச்சந்தவிருத்தம் உக-பா, வானிறத்து வ்யாக்யாநம். கூள

மூ.—வானிறத்தோர் சீயமாய்வஹ்ந்த வாளெயிற்றவன்
ஊனிறத்துகிர்த்தல மழுத்திணையுலாயசீர்
நால்நிறத்தவேதநாவர் கல்லயோகிணல் வணங்கு
பால்நிறக்கடற்கிடந்த பற்பநாபனல்லயே. (உக)

ர்ணவத்திலே ஒருவரில்லாதாரைப்போலே தனியே கண்வளர்ந்த
ருளுகிறுனென்கை. .... .... ... (உஉ)

இருபத்துமூன்றும்பாட்டு (வானிறத்திதியாதி)

வானிறத்து வெளுத்தநிறத்தையுடைய
ஓர் விலக்ஷணமான
(அன்றியே)
ஓர் போக்யதையிலே அத்விதீயமான
சீயமாய் ஸிம்ஹஸ்ஜாதீயனையவதரித்து,
†வளர்ந்த வளராநின்றுள்ள
வாள் ஒளியையுடைய
எயிற்றவன் பற்களையுடைத்தானஹிரண்யனுடைய
ஊனிறத்து ஸரீரத்தின்மர்மத்திலே
உகிர்த்தலம் நகங்களுடையப்ரதேசத்தை
அழுத்தினை அழுத்தினவனே!
உலாய ஸர்வலோகப்ரஸித்தமான
சீர் ப்ராமாண்யத்தையுடைத்தாய்,
நால் சதுர்விதமான
நிறம் உதாத்தா z நுதாத்தஸ்வரிதப்ரசயரூப
மான மேனியையுடைத்தான
வேதம் வேதங்களை
நாவர் நாக்கிலேயுடைத்தானவைதிகாக்ரேஸரர்
கல்ல கன்றுயிருக்கிற
யோகிணல் பக்தியுபாயத்தாலே, (அன்றிக்கே) விலக்ஷணமானப்ரபத்த்யுபாயத்தாலே யென்னுமாம்,
வணங்கு ஆஸ்ரயியாகிற்கிற
பால் கஷீரத்தினுடைய

---

† மூலாநநுகுணம்.

நிற வர்ணத்தையுடைத்தான
கடல் ஸமுத்ரத்திலே
கிடந்த கண்வளர்ந்தருளுகிற
பற்பநாபன் பத்மநாபன்
அல்லலே அன்றே ?

"இப்படிப்பட்ட வுன்னுடைய அகழ்தகடாஸாமர்த்தியத்தையார் பரிச்சேதிக்கவல்லார்" என்று வாக்யசேஷம். (உஉ)

அ.—இருபத்து மூன்றும்பாட்டு. ப்ரளயாபத்ஸகனைக்கு வடதளஸாயியான அகழ்தகடாஸாமர்த்தியத்தளவன்றியே தேவரீருடைய அஸாதாரண விக்ரஹத்தை, (க) "நாவாயுத்தநாம் கூகூவாஸிபவாயுத்தநாம் தியா - நாஸ்யார்த்ததும் க்ருத் வாஸிம்ஹஸ்யார்த்ததுமந்தா" என்கிறபடியே ஏகதேசத்தை மநுஷ்யஸஜாதீயமாக்கியும் ஏகதேசத்தை திர்யக்ஸஜாதீயமாக்கியும் இப்படி யோநித்வயத்தை ஏகவிக்ரஹமாக்கி, அர்த்தித்வ நிரபேக்ஷமாகப்பிதாவாலேபுத்ரனுக்குப்பிறந்த ஆபத்தை தேவர்பொறுக்க மாட்டாமையாலே தாணிலே தோற்றின அகழ்தகடாஸாமர்த்தியத்தை அநுஸந்தித்து, இத்தையாவர் பரிச்சேதித்து அறியவல்லாரென்கிறார்.

வ்யா:—(வானிறத்தோர் சீயமாய்) புருஷோத்தமன் தன்னை அழியமாறி ஹிம்ஹஸஜாதியனைப்போலே ஸ்வாபாவிகமான நிறத்தையும் மாறுவதே பென்கிறார். வால்நிறம்—வெளுத்தநிறம். (ஓர்சீயமாய்) (உ) "வஹ்நயாவிஜாயதே - பஹ்நதாவிஜாயதே" என்றும், (ங) "வஹ்நிநீ - பஹ்நிநி" என்றும் சொல்லுகிற அஸங்க்யாதமான அவதாரங்களிலே இங்ஙனிருப்பதொன்றில்லாமையாலே அத்விதீயமென்கிறார். (ச) "அழகியான்றனே" என்கிறபடியே போக்யதையில் அத்விதீயத்வத்தைச் சொல்லவுமாம். சீயம்-சிங்கம். (வளைந்தவாளெயிற்றவன்) வளைந்தஒளியையுடைத்தான எயிற்றையுடைய ஹிரண்யன். இத்தால் - வாபலத்திலே அத்யர்ப்பவியாத ஔஜ்வல்யமான புஜபலத்தைச் சொன்னபடி. (உவன்நிறத்து உகிர்த்தலமழுத்தினைப்) ஶரீரத்தில் மர்மத்திலே நிருவுகளை அழுத்தினவனே. "உகிர்த்தலமழுத்தினை" என்றது, அவன்வரத்திலே

---

(க) ப்ரஹ்மபு-கூஉ-கூக (உ) யஜு-ஆர-ங (ங) ஹி-கா-நி (ச) சு-திருவ-உஉ.

மூ;—கங்கைநீர்பயந்தபாத பங்கயத் தெம்மண்ணலே
அங்கையாழிசங்குதண்டு வில்லும் வாளுமேந்திணைப்
சிங்கமாயதேவதேவ தேனுலாவுமென்மலர்
மங்கைமன்னிவாழுமார்ப வாழ்மேனிமாயனே. (உச)

---

அந்தர்ப்பவியாத வ(ய)தஸாதநத்தாலே அநாயாஸேந அழித்தபடி சொல்லிற்றாகிறது. (உலாயசீர் நால்நிறத்த வேதநாவர்) ஸர்வலோகப்ரஸித்தமான ப்ராமாண்யத்தை யுடைத்தாய், உதாத்தாநுதாத்த ஸ்வரிதப்ரசயரூபமான நாலுவகைப்பட்ட ஸ்வரத்தையுடையவேதத்தை நாவிலேயுடையவர்கள். நிறம் - மேனி. இதால்-அநுமாநாதிகளாலே தத்வநிர்ணயிக்குமவர்களன்றியே, வைதிகர் ஆஸ்ரயிக்குமவனென்கை.

(நல்லயோகிலுல்வணங்கு) பக்தியோகத்தாலே ஆஸ்ரயிக்குமவர்களென்னுதல். விலக்ஷணமான ப்ரபத்தியாலே ஆஸ்ரயிக்குமவர்களென்னுதல். யோகு - யோகம் - உபாயம். (பால்நிறக்கடல் கிடந்த பற்பநாபனல்லையே) தேவரீர் திருமேனிக்குப் பரபாக(ம)ரூபமான திருநிறத்தையுடைத்தான கடலிலேஜகத்துக்கு உத்பாதகனென்று தோற்றும் வடிவோடே கண்வளர்ந்தருளுகிறபற்பநாபனல்லையோ. "நல்லயோகிலுல்" என்கையாலே - வாக்யார்த்த ஜ்ஞாநமென்ன, கர்மஜ்ஞாந ஸமுச்சயமென்ன, இவற்றை மோக்ஷஸாதநமென்கிற குத்ருஷ்டிகளில் வைதிகருக்குண்டானை வ்யாவ்ருத்தி சொல்லுகிறது. "உலாயசீர்" என்று அதிகாரிவிசேஷணமாகவுமாம். "உலாயசீர் - பற்பநாடன்" என்று அந்வயிக்கவுமாம். அப்போது, (க) "விஷ்டஃ - விதிதஃ" என்கிறபடியே கல்யாணகுணயுக்தனென்கிறது. (உக)

இருபத்துநாலாம்பாட்டு. (கங்கையித்யாதி).

கங்கைநீர் பயந்த பாதபங்கயத்து எம் அண்ணல் — கங்காதீர்த்தத்தை உண்டாக்கின பங்கஜம்போலே போக்யமான திருவடிகளையுடைய நம்முடைய நாயனே;

---

(க) ரா-ஸு-உக-உ0.

| | |
|---|---|
| அம் | அழகிதான |
| கை | திருக்கைகளிலே |
| ஆழி | திருவாழியாழ்வானென்ன, |
| சங்கு | ஸ்ரீபாஞ்சஜந்யமென்ன, |
| | கௌமோதகியென்ன, |
| வில்லும் | ஸ்ரீஸார்ங்கமென்ன, |
| வாளும் | நந்தகமென்ன, (இவற்றை) |
| ஏந்திணாய் | தரித்தவனே! |
| சிங்கமாய | நரஸிம்ஹரூபியாயவதரித்த |
| தேவதேவ | நித்யஸூரிநிர்வாஹகனே! |
| தேன் | ப்ரமரங்கள் |
| உலாவு | ஸஞ்சரியாநின்றுள்ள |
| மெல் | ஸுகுமாரமான |
| மலர் | தாமரைப்பூவை ஜந்மபூமியாகவுடைய |
| மங்கை | பெரியபிராட்டியார் |
| மன்னி | நித்யவாஸம்பண்ணி |
| வாழும் | அநுபவிக்கும் |
| மார்ப | திருமார்பையுடையவனே! |
| ஆழி | ஸமுத்ரம்போலே ப்ரமநிரமான |
| மேனி | திருமேனியையுடைய |
| மாயனே | ஆஸ்சர்யபூதனே!. இங்கே "நித்யஸூரிகள் பெரிய பிராட்டியாரல்லது வேறு உன்னைப்பரிச்சேதிக்கவல்லார்ஹர்" என்றவாக்ய போஷகம். (உரை) |

அவ;—இருபத்தாலாம்பாட்டு. பரமபாவநனுமாய் நிரதியபோக்யனுமாய், போக்தாக்களைக் காத்தூட்டவல்ல பரிகரத்தையுமுடைய தேவரீர், ஆஸ்ரிதரக்ஷணத்துக்கு அநுகூலமாக திவ்யவிக்ரஹத்தை அழியமாறிவந்து தோற்றின இவ்வேற்றத்தை நித்யஸூரிகளறிதல், பிராட்டியறிதலொழிய வேறறியவல்லாரா ரென்று பின்னையும் அந்த நரஸிம்ஹவ்ருத்தாந்தத்திலே ஈடுபடுகிறார்.

வ்யா,—(கங்கைகரீபயந்த பாதபங்கயத்தெம்மண்ணலே) குரு பாதகனை ருத்ரனுக்கும் மோக்ஷத்தையப்பிறப்பிக்கும் அக்கங்கைக்

கும் உத்பாதகனுய், ஸுத்தியுக்தர்க்கு நிரதிஸயபோக்யமானதிரு வடிகளையுடைய வென்னுதனே ! * அபராதாநாமாலயரான ஸம்ஸாரிகளுக்குப் பாவநமாய்அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரதோஷ ரான நித்யர்க்கும் முக்தர்க்கும் நிரதிஸயபோக்யமான திருவ டிகளை யுடையவனென்னை. இப்போது "அண்ணல்" என்று — இவ்வர்த்தத்தைத்தமக்கு நிர்ஹேதுகமாக ப்ரகாசிப்பித்த உப சாரஸ்ம்ருதியாலே என்னுதனே யென்கிறார். (அங்கையாழி சங் குதண்டு வில்லும் வாளுமேந்திணைப்) அத்திருவடிகளை அநுபவி க்க விழுந்தார்க்கு விரோதிகளை யழியச்செய்யும் திவ்யாயுதங்களை "எப்போது ஆர்க்கு என்வருகிறதோ" என்று ஸர்வதா காத்து கிற்குமவனே. தனக்குத்தானே ஆபரணமான திருக்கையிலே திரு வாழி தொடக்கமான ஸ்ரீ பஞ்சாயுதங்களை தரித்தவிதுவும் திரு வடிகளோபாதி தமக்கு போக்யமாயிருக்கிறதாய்த்து.

(சிங்கமாய தேவ தேவ) அத்திவ்யாயுதங்கள் ஆஸ்ரிதவ்யாமோஹம் படி வரங்கொண்ட ஹிரண்யனை, நகாயுதமான ஸிம்ஹமாயழியச் செய்த ஆஸ்ரித பக்ஷபாதத்தாலே நித்யஸூரிகளை யெழுதிக்கொ ண்டவனே. திவ்யமங்கள விக்ரஹத்தின் சுவடறியும் நித்யஸூரி களுக்கிறே அவ்வடிவையும் அழியமாறாதரக்ஷித்த, ஆஸ்ரித பக்ஷ பாதத்தின் எல்லைதெரிவது. (தேனுலாவு மென்மலர்மங்கை மன் னிவாழுமார்ப) செவ்வியையும் மென்மையையு முடைத்தான தாம ரையில் பிறப்பாலும் பருவத்தாலும் நிரதிஸயபோக்யையான பிரா ட்டி நித்யவாஸம்பண்ணி யநுபவிக்கும் திருமார்பையுடையவனே. இப்போது,(க) "அகலகில்லேனிறையும்" என்கிறளாமாந்யமன்றிக் கேஹிரண்யனையழியச்செய்த வீரத்தாலே,(உ)"ஸ்தோரம் வரிஷ வுஜை- பர்த்தாரம்பரிஷஸ்வஜே" என்கிறபடியேஇவ்வடிவிலே பிரா ட்டி அத்யாதரம், பண்ணினபடியைச் சொல்லுகிறது. இத்தால் நித்யஸூரிகளளவுமன்றிக்கே தலைநீர்ப்பாட்டிலே அநுபவிக்கும் பிராட்டியும் இவ்வாஸ்ரித பக்ஷபாதத்துக்குத் தோற்றிருக்கும்படி யைச் சொல்லிற்றாய்த்து.(ங)"என்னடியாரது செய்யார்" என்றிறே அவன்படியிருப்பது. (ஆழிமேனிமாயனே) கடல்போலே ஸ்ரம ஹரமான திருமேனியையுடைய ஆஸ்சர்யபூதனே, ஹிரண்யநு

---

(க) தி-வாய்-சூ-க0-க0. (உ) ரா-ஆ கூ0-ஙசூ. (ங) பொரி-தி-சு-கூ-உ.

எ உ ;ச்சந்தவிருத்தம் உரு-பா, வரத்தினில் வ்யாக்யானம்.

மூ.—வரத்தினிற்சிரத்தை மிக்க வாளையிற்றுமற்றவன்
உரத்தினிற்கரத்தை வைத்துகிர்த்தலத்தை யூன்றிணைய
இரத்தியிதென்ன பொய்யிரந்த மண்வயிற்றுளே
கரத்தையுன்கருத்தையாவர் காணவல்லர் கண்ணனே. (உரு)

---

க்கு அநுபவநீயமான அவ்வடிவுதானே ஆஸ்ரிதர்க்கு ப்ரமநோ
மானபடியைச் சொல்லுகிறது. ... ... ... (உசு)

இருபத்தஞ்சாம்பாட்டு. (வரத்தினிலித்யாதி).

| | |
|---|---|
| வரத்தினில் | ப்ரஹ்மா தந்தவரத்திலே |
| சிரத்தை | ப்ரத்தையாலே |
| மிக்க | அதிசயித்திருக்கிற |
| வாள் | அஸிபோலேயிருக்கிற |
| எயிற்று | கோரைப்பற்களையுடைய |
| மற்றவன் | ஆஸ்ரிதவிரோதியான ஹிரண்யனுடைய |
| உரத்தினில் | மார்விலே |
| கரத்தை | திருக்கைகளை |
| வைத்து | வைத்து |
| | |
| தலத்தை | ப்ரதேசத்தை |
| ஊன்றிணை | ஊன்றிக்கொன்று; |
| ய் | ஸர்வசக்தியாய் அவாப்தஸமஸ்தகாம |
| | |
| இரத்தி | மஹாபலிபக்கல் பூமியையிரந்தாய்; |
| இது | மஹாபலிபக்கல் பூமியையிரந்தவிது |
| என்னபொய் | ப்ரமாணங்களைப்பார்த்தால் மெய்யாயி |
| | ருக்கிறது; அர்த்தஸ்திதியைப்பார்த் |
| | தால் பொய்யாயிருக்கிறது. ஆகையா |
| | லே இதென்ன வாஸ்சர்யபூதமான |
| | பொய். |
| இரந்த | மஹாபலிபக்கலிலே அர்த்தித்துப்பெற்ற |
| மண் | பூமியை |
| வயிற்றுளே | திருவுதரத்திலே |

திருச்சந்தவிருத்தம் உரு-பா, வரத்தினில் வ்யாக்யாநம். எங்கு

காத்தி ஒளித்து ரக்ஷித்தாய்.
உன்கருத்தை அநந்ய ப்ரயோஜந ப்ரயோஜநாந்தரபர
விழுகர்களை ரக்ஷித்த உன்நிணைவை
யாவர்காண வல்லர் } காணவல்லார்யாவர்,
கண்ணமேன க்ருஷ்ணனயவதரித்தயமேன;
(நீயே அருளிச்செய்யவேணுமென்றுகருத்து), (உரு)

